Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள

கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 09 (17.06.2005) வெள்ளிக்கிழமை இதழ்:261

## அரசாங்கத்தின் மீதான புலிகளின் குற்றச்சாட்டு நியாயமானது–சந்திரிகா



கொழும்பு —

திருகோணமலையிலும், பொத்துவில் அறுகம்குடாவிலும் புத்தர்சிலையை நிறுவிய பௌத்த குருமாரின் செயல், தமிழ் மக்களை ஆவேசப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்றென ஜனாதிபதி சந்திரிகா கண்டித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் ஜனாதிபதி மாளிகையிலிருந்து செய்மதிமூலம் ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

எனது அரசாங்கமே முதன் முதலில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கியது. 2002ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு (12 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுனாமி' பொதுக் கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த அமெரிக்கா மீண்டும் அழுத்தம்!

வொஷிங்டன் —

தேக்கமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அடித்தளமாக அமையக்கூடிய பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசாங்கம் விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் என - அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஆசிய பசுபிக் நாடுகளுடனான சர்வதேச உறவுகள் குறித்த உபகுழுவின் முன் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தெற்காசிய நாடுகள் தொடர்பாக அமெரிக்காவின் பொருளாதார அரசியல் கொள்கைகள் பற்றி நீண்ட விளக்கமளித்த கிறிஸ்ரினா றொக்கா இலங்கை விவகாரம் குறித்து பேசுகையில் அவர் (12 ஆம் பக்கம் பார்க்க)



## பொதுக்கட்டமைப்பை ஆதரிப்போம் அரசாங்கத்துக்கு ஆதரவு இல்லை!

### கூட்டமைப்பு எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம்

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு, அது அமுல் படுத்தப்படவேண்டுமென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்துள்ளது.

எனவே நாடாளுமன்றத்தில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வாக்கெடுப்பொன்று நடைபெற்றால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்து வாக்களிக்குமென கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றிற்கு ஏன் கொண்டுவரவேண்டுமென்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில், இது ஒரு கைச்சாத்திட வேண்டிய உடன்படிக்கையாகும். முன்னர் போர்நிறுத்த உடன்படிக்கைகூட கைச்சாத்திடப்பட்டது. ஆனால் அது நாடாளுமன்றுக்கு கொண்டுவரப்பட வில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அனுமதிபெற்றே பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து!

கொழும்பு —

சுனாமி மீள்கட்டமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு வரைபை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து - அதற்கு அனுமதியைப் பெற்றபின்பே புலிகளுடன் இணைந்து கைச்சாத்திட ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த புதன்கிழமை 22ஆம் திகதி சிறப்பு சட்டத்தின் கீழ் இந்த வரைபு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் அனுரா பண்டாரநாயக்க, மைத்ரிபால சிறிசேன மற்றும் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா ஆகியோர் பங்கேற்றனர்.

இருந்தபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின்போது இந்தப் பொதுக் கட்டமைப்பு வரைபு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படமாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்திருந்தார்.

நாடாளுமன்றில் பொதுக்கட்டமைப்பு வரைபு தாக்கல் செய்யப்படுவது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாதப்போக்கை கண்டித்து கைதடியில் எதிர்ப்புப் போராட்டம்!

## பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால்

# பேரினவாதப்போக்கை கண்டித்து கைதடியில் எதிர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம் —

தென்னிலங்கையிலுள்ள பௌத்த பிக்குகள் தமது இனவாதப் போக்கைக் கைவிடக் கோரியும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்துக்கு அரசாங்கம் காட்டிவரும் அக்கறையின்மையைக் கண்டித்தும் கைதடி மக்கள் நேற்று அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

இந்த அடையாள எதிர்ப்புப் போராட்டம் - நேற்றுக்காலை 9 மணிமுதல் நண்பகல் வரை நடைபெற்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சிக்கின்றபோது தென்னிலங்கையிலுள்ள இனவாதிகள் சிலரும், பௌத்த பிக்குகளும் இனவாதத்தைக் கக்கிவருவதை உடன் நிறுத்தவேண்டும் எனக் கோரியே கைதடி மக்கள் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டம் காரணமாக கைதடியிலுள்ள அனைத்து வணிக நிலையங்களும் மூடப்பட்டிருந்ததுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட் டது.

மேற்படி போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, அடையாள எதிர்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால் அதுவே சந்திரிகாவுக்கு இறுதி நிமிடம்!

## தேசிய பிக்குகள் முன்னணி செயலாளர் எச்சரிக்கை

கொழும்பு —

தமது எதிர்ப்பையும் மீறி ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால் - அதுவே அவருக்கு கடைசி நிமிடமாக இருக்குமென்று தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் கலவெல்கல சந்திரலோக தேரர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஆறு நாட்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தம்பர அமிலதேரர் சுயநினைவிழந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனை யில் உள்ளார். தேரரின் உயிருக்கு உத்தரவாதமளிக்க மருத்துவர்கள் மறுத்துவிட்டனர். தம்பர அமிலதேரர் உயிரிழந்துவிட்டால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நிம்மதியாக வாழவிடமாட்டோம். நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு ஜனாதிபதியிடமிருந்தோ, மகாநாயக்க தேரர்களிடமிருந்தோ உரிய பதில் கிடைக்கவில்லை.

இந்த நாட்டில் மகாசங்கத்தின் உண்மையான பலம் அவர்களுக்குத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்று, மாகாணசபைகளில் ஜே.வி.பி. தனியாகவே இயங்குமாம்!

## செய்தியாளர் மாநாட்டில் சோமவன்ச



கொழும்பு —

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி. விலகிவிட்டதாக அந்தக் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நேற்றுக்காலை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெறுவதாகவிருந்த செய்தியாளர் சந்திப்பு கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச சுகவீனமுற்றிருப்பதால் சற்றுத் தாமதமாகவே - அரை மணி நேரத்தின் பின்னரே ஆரம்பமானது.

அங்கு கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க பேசுகையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அலுவலகம் மீது பாண்டிருப்பில் தாக்குதல்!

## போராளிகள் இருவர் காயம்

கல்முனை —

விடுதலைப் புலிகளின் பாண்டிருப்புப் பிரதேச அரசியற்துறை அலுவலகம் மீது நேற்று நண்பகல் இனந்தெரியாத நபர்களால் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு போராளிகள் காயமடைந்தனர்.

மேற்படி அலுவலகத்தில் போராளிகள், பொதுமக்கள் சந்திப்பை நடத்திக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இரண்டு நபர்கள் திடீரென கைத்துப்பாக்கி மூலம் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

EXPOAIR

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# ஆரம்பக் கல்வி, ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணக் கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

யாழ். வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு ஆரம்பக் கல்விக்கு 77ஆசிரியர்களும், ஆங்கில பாடத்திற்கு 109 ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளனர்.

இதேவேளை, சில பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை நீண்டகாலமாக இருந்து வருவதாகவும், இந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் புதிய சம்பள அளவுத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தக்கோரி ஊழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

அமைச்சரவை உபகுழு மற்றும் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்க கூட்டுக்குழு ஆகியவற்றிற்கு இடையே கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி பல்கலைக்கழகங்களில் பணி புரியும் அனைத்து பணியாளர்களதும் சம்பள முரண்பாடுகள் இந்த வருட ஆரம்பத்தில் சீர் செய்து புதிய சம்பள அளவுத் திட்டமொன்றை அமுலாக்குவதெனத் தீர்வு காணப்பட்டது.

ஆனால், இந்த தீர்மானம் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே அனைத்து பணியாளர்களதும் சம்பள முரண்பாடுகள் சீர்செய்யப்பட்டு புதிய சம்பள அளவுத் திட்டம் உடனடியாக அமுல் படுத்தப்பட வேண்டும்.

இது தவிர 04.3.1997 க்குப் பின்னர் இணைந்து கொண்ட சகல ஊழியர்களுக்கும் மாதாந்த இழப்பீட்டுப் படியை அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய வழங்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - பாதுகாப்பு, நீர்விநியோகம் மற்றும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் ஊழியர்கள் மட்டும் பல்கலைக்கழக நலன்கருதி பல்கலைக்கழக ஊழியர் சங்க அனுமதியுடன் நேற்று கடமையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊடக வள நிலையத்தில் கலையகத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்—

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஆகியவற்றுக்கான கலையகமும், ஊடகவியல் மன்றங்களுக்கான அறையும் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரும், டெனிஷ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத் தலைவரும் இணைந்து அடிக்கல்லை நாட்டவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# பட்டதாரி பயிலுநர்களுக்கான நேர்முகத் தேர்வு 22 முதல்!

யாழ்ப்பாணம்—

வேலையறற பட்டதாரிகளுக்குப் பொருத்தமான பதவியொன்றை வழங்கும் திட்டத்தின் கீழும், கீழமைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகளை பொருத்தமான பதவிகளுக்கு நியமிப்பதற்கு ஏதுவாக யாழ். மாவட்டத்தில் விண்ணப்பித்த பட்டதாரிகளின் தராதரப் பத்திரங்களை பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரிகள் பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (மூலப்பிரதி) மற்றும் இத் திட்டத்தின் கிழ் பட்டதாரி பயிலுநராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஆரம்பப் பயிற்சியையும், தற்பொழுது நடைபெறும் முறையான பயிற்சியையும் பெற்றமைக்கான சான்றிதழ்கள் என்பவற்றின் மூல ஆவணங்களுடனும் அதன் நிழற்படப் ,பிரதிகளுடனும் சமுகமளிக்கவேண்டும்.

விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவருக்குமான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் தனித்தனியே தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகப் பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# நாட்டுப் பற்றாளர் சாவு

யாழ்ப்பாணம்—

சுகவீனம் காரணமாக நாட்டுப் பற்றாளர் ஒருவர் நேற்றைய தினம் சாவடைந்துள்ளார்.

கோட்டைப்பளை - துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த பொன்னையா சிவகாந்தன் என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வல்வெட்டித்துறை,கம்பர்மலை பகுதியில் மு.மதிவாணன் (காங்கேயன்) என்பவரது நாட்குறிப்பேடு தவறவிடப்பட்டுள்ளது. அதனுள் பெறுமதிவாய்ந்த எட்டு புகைப்படங்கள் உட்பட ஆவணங்கள் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தொ. இலக்கம்:-021226 3432 முகவரி:- டோறா தொலைத் தொடர்பு நிலையம், பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(C/4208)

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர் கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P - 0779122836** நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)

### மனோகரா யாழ்ப்பாணம்



இன்று முதல் அதிரடி வெளியீடு!
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்
அந்நியன் anniyan
இசை:- ஹாிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்
விசேட காட்சிகளும் உண்டு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

### நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், மீனா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
சேதுபதி I.P.S
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

### ராஜா யாழ்ப்பாணம்

ரஜினிகாந், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த



சந்திரமுகி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

### நாகம்ஸ் சுன்னாகம்

ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த



ஜித்தன்
காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

### நாதஸ்வர யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இன்டி பென்டன்ஸ் டே
டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்
**THE DAY AFTER TOMORROW**
நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை சித்தரிக்கும்
காட்சிகள்
புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30

## பணிநிலை வேண்டுகை

### தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழம்.

தமிழீழ நிர்வாக சேவையின் சமூக, அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு ஆளணி சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதனால் கீழ்க் காணும் தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கல்வித் தகைமை :-**
க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாடத்தில் திறமைச் சித்தியுடன், கணித பாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**
கூட்டுறவுப் பயிற்சிநெறி, நில அளவையியல் பாடநெறி, கணக்கியல் சார்ந்த பாடநெறி, திணைக்களம்/ நிறுவனங்களில் பணிபுரிந்தமைக்கான சான்றிதழ்கள் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது எல்லை :-**
20 தொடக்கம் 30 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம் :-**
சகல பணி நிலைகளிற்கும் அவரவர் கல்வித் தகைமைகளுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு, கல்வித் தகைமையின் நிழற்படப் பிரதியுடன் 30-06-2005 இற்கு முன் கிடைக்கக் கூடியவாறு கீழ் காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**முகவரி:-**
ஆளணிப் பகுதி, தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப் பணியகம்,
155ம் கட்டை, பாரதிபுரம், கிளிநொச்சி.

(3675)

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை
## Northern Region Transport Board

ஸ்ரீலங்கம SRI LANGAMA

### கூறுவிலை விற்பனை
### (Scaled Tender)
### வடபிராந்திய போக்குவரத்துச்சபை - யாழ். சாலை

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பேரூந்துகளிலிருந்து கழிக்கப்பட்ட பின்வரும் உதிரிப்பாகங்கள் கூறு விலை விற்பனைக்காக யாழ். சாலையில் விடப்பட்டுள்ளன.

*உடைந்த வில்லுத் தகடுகள்,
*இரும்பு வகைகள், அலுமினியம்,
*பாவித்த ரயர், ரியூப், பிளப்,
*அடிச்சட்டம் போன்ற பொருட்களாகும்.

மேலே கூறப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் 20.06.2005 இற்கு பின்னர் "வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையில்" சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில் காலை 9.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவர். மேலும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 1000/= உம், மீளளிக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 25,000/= உம் எமது பிராந்தியக் கணக்காளர், வ.பி.போ.சபை கோண்டாவிலில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். தங்கள் கூறு விலைக் கோரிக்கைகளை அனுப்புவதற்கான விண்ணப்பப் படிவங்களை பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந் துள்ள வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் விநியோக உத்தியோகத்தரிடம் பெற் றுக் கொள்ளவும். கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 08.07.2005 க்கு முன்னர் தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ. சபை, பலாலி வீதி, கோண்டாவில் சாலை என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.10.07.2005 காலை 10 மணிக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் பொழுது வ.பி.போ.சபை தலைமைக் காரியாலயத்திற்கு தாங்கள் சமுகமளிக்க வேண்டும். இப்பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படமாட்டாது. பொருட்களின் பெறுமதியின் 25% இற்குரிய பணம் உடன் செலுத்தப்படுவதுடன், மிகுதிப் பணம் ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்பட்டு இக் காலப் பகுதியில் பொருட்கள் சாலை வளவினுள் இருந்து எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**கூறுவிலைச் சபை, வ.பி.போ.சபை,**
**கோண்டாவில்.**

(C/4207)

# பொதுக்கட்டமைப்பு உருவாக பிக்குமார் சங்கம் ஆதரவு!

கொழும்பு—

உத்தேசிக்கப்பட்ட சுனாமி நிவாரண சபையால் ஏற்படும் நன்மைகள் குறித்து சில தரப்பினர் கவனம் செலுத்துவதில்லை எனவும், இதனால் மக்கள் மத்தியில் இது தொடர்பாக தவறான அபிப்பிராயம் உருவாகியுள்ளதாகவும் அகில இலங்கை பிக்குமார் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அகில இலங்கை பிக்குமார் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்தச் சங்கத்தின் செயலாளர் வட்டினபாகே சோமானந்த தேரர் இங்கு உரை நிகழ்த்துகையில் -

சிலர் சுனாமி நிவாரண சபை ஏற்படுத்தப்படுவதை எதிர்த்து உண்ணாவிரதத்திலும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றமை பொருத்தமற்ற செயலென நாம் கருதுகின்றோம்.

பிக்குமாரின் கடமை என்ன என்பது குறித்தும் - சுனாமி நிவாரண சபை குறித்த உண்மை நிலை குறித்தும் தெளிவுபடுத்த நாம் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

சுனாமி நிவாரண சபையை ஏற்படுத்தி செயற்படுவது மனிதாபிமான நடவடிக்கையாகுமென இங்கு உரையாற்றிய பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தேரர் தெரிவித்தார்.

இந்த உன்னதமான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள். இந்த சுனாமி நிவாரண சபையில் அரசாங்க அதிகாரி ஒருவரே கைச்சாத்திடவுள்ளதாகவும், தான் கைச்சாத்திடப்போவதில்லை எனவும் ஜனாதிபதி மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

எனவே, இவ்வாறான நடவடிக்கைமூலம் நாடு துண்டாடப்படுவதற்கு இடமுள்ளதா என அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென அவர் தெரிவித்தார். (தே)

## தமிழகக் கட்சிகளின் எதிர்ப்பை மீறி பாதுகாப்பு உடன்பாடு கைசாத்தாகும்!

### அரச உயர் அதிகாரிகள் தெரிவிப்பு

சென்னை—

தமிழக அரசியற் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி இலங்கையுடனான பாதுகாப்பு உடன்பாடு கைச்சாத்திடப்படுமென இந்திய அரச உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை - இந்தியா இடையேயான இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் சம்பிரதாய பூர்வமாகவும் சட்ட நடைமுறைகளின் வடிவமாகவும் இல்லையென்றாலும் இந்தியா - இலங்கை இடையே இந்த ஒப்பந்தம் தொடர்பாக இறுதி முடிவு செய்யப்பட்டுவிட்டது.

தற்போது 450 இலங்கைப் படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

இந்த இராணுவ ஒப்பந்தத்தை தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகின்றது.

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் வரைதான் இந்த இராணுவ ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது ஒத்திவைக்கப்படும்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெறவேண்டியிருப்பினும் டிசம்பரிலேயே தேர்தலை நடத்த தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சிகள் மேற் கொண்டுவருவதாகத் தெரிகிறது. இதனாலேயே அடுத்த வருடத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உபுல் செனிவிரத்ன கொழும்புக்கு மாற்றம்

அம்பாறை—

விசேட அதிரடிப்படையின் அம்பாறை மாவட்ட கட்டளை அதிகாரி உபுல் செனிவிரத்ன கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர் கருணா குழுவுடன் இணைந்து நெருக்கமாகச் செயற்பட்டு வருவதாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

## பொதுக் கட்டமைப்புக்கு இ.தொ.கா ஆதரவு!

கொழும்பு—

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்புற்கு பூரண ஆதரவை வழங்குவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா கொண்டுள்ள உறுதியான கொள்கையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்கின்றது.

அத்துடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த ஐ.தே. கட்சி இணக்கம் தெரிவித்ததையும் வரவேற்கவேண்டும். பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதன் ஊடாக மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இணைந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு எதிராக சென்னையில் உண்ணாவிரதம்!



சென்னை—

இந்திய - இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 28 ஆம் திகதி சென்னையில் - அனைத்துக் கட்சிகளும் பங்கேற்கும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக சென்னையில் அனைத்துக் கட்சியினர், தமிழர் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் இயக்கப் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் அளித்த பேட்டியில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை உருவாக்க இலங்கை அரசு முன்வந்துள்ளதை நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை, இந்தப் பொதுக் கட்டமைப்புக்கு எதிராக இன வெறியைத் தூண்டுகின்ற ஜே.வி.பி மற்றும் பௌத்த பிக்குகளின் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த நிலையில் இலங்கை அரசின் பாதுகாப்பிற்காக இராணுவ ரீதியாகப் பயிற்சிகள் கொடுக்க, ஆயுதங்கள் வழங்க இலங்கை அரசுடன் இந்திய அரசு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராகி வருகிறது. தமிழினத்திற்கு எதிரான இந்த முயற்சியைக் கைவிடக் கோரி, தமிழ் மக்களின் சார்பாக எதிர்ப்புத் தெரிவிக்க, தமிழ் உணர்வாளர்களின் கலந்துரையாடல் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

என்னுடைய தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ்த் தேசிய இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா, ஓவியர் வீரசந்தானம் உள்ளிட்ட தமிழின உணர்வாளர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் இராணுவ ரீதியாக இந்திய அரசு - இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசுக்கு உதவ இந்திய அரசு முன்வந்திருப்பது தமிழர்களுக்கு எதிரானதே. ஆகவே, இந்திய அரசுக்கும் - இலங்கை அரசுக்கும் இடையேயான இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 28 ஆம் திகதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் மருத்துவர் சேதுராமன், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் தணிக்கையாளர் இளமுருகன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்து முழுநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்கின்றனர்.

சென்னை சேப்பாக்கம் தமிழ்நாடு அரசு விருந்தினர் இல்லம் எதிரில் நடைபெறும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மறுமலர்ச்சித் திராவிடர் முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் தொடக்கிவைப்பர்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டொக்டர் ச.ராமதாஸ் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துவைப்பார்.

இந்தப் போராட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி, தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சியின் செயலாளர் பெ.மணியரசன், தமிழ் தமிழர் இயக்கத் தலைவர் தியாகு, தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுபவீரபாண்டியன். தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவுனர் நா.அருணாச்சலம் உள்ளிட்ட தமிழ் இன உணர்வாளர்கள் பலரும் பங்கேற்று முழுநாள் சிறப்புரை ஆற்றுவர்.

போராட்டத்தின் முடிவில் தமிழ் நாட்டின் ஆளுநர் பர்னாலாவைச் சந்தித்து இந்த ஒப்பந்தத்தைக் கைவிட வலியுறுத்தும் கோரிக்கை மனு அளிக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தற்காப்புக்காக தாக்குதல் நடத்துவதில் தவறில்லை!

## இராணுவத்துக்கு கொட்டகதெனிய ஆலோசனை

கொழும்பு—

இராணுவத்தின் மீது நிழல் யுத்தம் தற்போது வலுவடைந்து வருவதால் அவர்கள தற்காப்பு தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்று முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபரும், சிஹல உறுமய உறுப்பினருமான கொட்டகதெனிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

இராணுவத்தினர் மீது தொடரும் தாக்குதல்கள் தொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறான பாதுகாப்பு ஆலோசனைகளை முன்வைத்துள்ளார்.

மேலும் அந்தக் கட்டுரையில்-

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளபோதும் இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் 1.3 ஆவது சரத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களை மேற்கொள்ள முடியாதபடி இராணுவத்துக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட லெப்.கேணல் முத்தலிப்பின் மரண வீட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு வந்திருந்த முத்தலிப்பின் குழுவிலுள்ள ஏனையோருடன் பேசியிருந்தேன்.

முத்தலிப்பைப் படுகொலை செய்வதற்கு விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் கொழும்புக்கு வந்துள்ளார்கள் என்பது தமக்கு முதலே தெரியும். அவர்கள் தங்கியிருந்த இடமும் தமக்கு தெரியும். என்றும் அந்த இடத்தை தாம் படம் எடுத்து வைத்திருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

முத்தலிப் படுகொலை செய்யப்பட்ட உடன் தாம் அந்த இடத்தைச் சுற்றிவளைத்தபோது அதற்கிடையில் அவர்கள் அங்கிருந்து தப்பிவிட்டனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தப் பிஸ்டல் குழுவினர் தொடர்பாக இராணுவத்தினர் அறிந்திருந்தும் அவர்களைக் கைது செய்யவோ - அவர்கள் இருந்த இடத்தில் தேடுதல் நடத்தவோ இராணுவத்துக்கு அதிகாரம், சுதந்திரம் இல்லை.

ஏனெனில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் 2.12 ஆவது சரத்தின் படி தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் இராணுவத்திடமிருந்து பிடுங்கப்பட்டிருக்கிறது. இப்படியான நிலையில் தனியே கொலை அச்சுறுத்தலின் மத்தியில் இராணுவம் தமது பணியை முன்னெடுப்பது மிகக்கடினம்.

இராணுவத்தினரின் தாக்குதல் நடத்தும் அதிகாரம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் பீடுங்கப்பட்டிருப்பினும், தற்காப்புக்காகத் தாக்குதல் நடத்தும் அதிகாரம் எவருக்கும் உரியது. அது தனிமனித சுதந்திரம். அதனை யாரும் மேற்கொள்ளலாம்.

ஆகவே, தமக்கு ஏதாவது அச்சுறுத்தல் வரும் பட்சத்தில் தற்காப்பு தாக்குதலை நடத்தி அதிலிருந்து தப்பிக்க இராணுவத்தினர் பழகிக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# பொதுக்கட்டமைப்பு யோசனையில் எந்த இரகசியமும் கிடையாது!



## ஜயந்த தனபால

கொழும்பு—

சுனாமி அனர்த்த மீள்கட்டமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு யோசனையில் எந்தவிதமான இரகசிய சரத்துக்களும் இல்லையென அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இந்திய ஆங்கில இணையத் தளத்துக்கு அவர் வழங்கிய பேட்டியி லேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் -

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஆவணம் தயாரிக்கப்பட்டுவிட்டது. ஜனாதிபதி கையொப்பமிடும் பட்சத்தில் அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

பொதுக்கட்டமைப்பு மூலம் விடுதலைப் புலிகளுக்கு நன்மைகள் கிடைக்காத ஒப்பந்தத்தில் அவர்கள் கையொப்பமிடுவார்களா என்பதை என்னால் கூறமுடியாதென்றபோதும் - சமாதான ஒப்பந்தத்தின்பின் அதன் பலன்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவேண்டிய நிலை அவர்களுக்கும் இருக்கிறதென அவர் மேலும் தெரிவித்தார்.

## நயினாதீவு உற்சவத்தையொட்டி விசேட பஸ் சேவை

நயினாதீவு—

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய விசேட உற்சவ தினங்களையொட்டி எதிர்வரும் 20 ஆம் திகதியிலிருநது, 24 ஆம் திகதிவரை பக்தர்களின் நன்மை கருதி யாழ்.பஸ் நிலையத்திலிருந்து விசேட சேவையாக 15 நிமிடத்துக்கு ஒரு பஸ் புறப்படும் என -

வட பிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போ பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# பிரதேச செயலக மகளிர் கிரிக்கெட்: நல்லூர் அணி மாவட்ட சம்பியன்!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனாக தெரிவாகியுள்ளது.

எட்டு பிரதேச செயலக அணிகள் பங்குபற்றிய இந்தப் போட்டியின் இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலர் அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி பிரதேச செயலக அணி 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கேமாவதி 15 ஓட்டங்களையும், சோபனா 6 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் நல்லூர் செயலக அணி வீராங்கனைகளான நளினி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நிலானி 3 ஓட்டங்களுக்கும், சண்முகாதேவி 4 ஓட்டங்களுக்கு தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் செயலக அணி 3.4 ஓவர்களில் வெற்றி இலக்கான 48 ஓட்டங்ளைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனானது.

இதில் வினோஜா 33 ஓட்டங்களையும், நளினி 5 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தனர்.

போட்டிகள் யாவும் அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றன. இந்தப் போட்டிகள் ஆறுபேர் பங்கு கொள்ளும் 5 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. (113)

# கவுண்டி அணியிடம் மீண்டும் அவுஸ்ரேலிய அணி படுதோல்வி!



லண்டன் —

இங்கிலாந்தில் சோமர்செற் கவுண்டி அணியுடனான ஒரு நாள் பயிற்சி ஆட்டத்திலும் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது.

ஏற்கனவே ருவென்ரி-20 ஆட்டமொன்றில் இங்கிலாந்து அணியிடம் 100 ஓட்டங்களால் தோல்வி கண்ட அவுஸ்ரேலியா நேற்றுமுன்தினம் சோமர்செற் அணியுடன் மோதியது.

50 ஓவர்கள் கொண்ட இந்தப் போட்டியில் அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அவுஸ்ரேலிய அணி வீரர்கள் அபாரமாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தனர். இதனால் 5 விக்கெட் இழப்புக்கு 342 ஓட்டங்களை அவுஸ்ரேலியா பெற்றுக்கொண்டது.

ஹைடன் 53 பந்துகளில் 12 பவுண்டரிகளுடன் 76 ஓட்டங்களையும், கடிச் 24 பந்துகளில் 12 ஓட்டங்களையும், பொண்டிங் 86 பந்துகளில் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 80 ஓட்டங்களையும், மார்ட்டின் 49 பந்துகளில் 44 ஓட்டங்களையும், ஹஸ்சே 39 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 51 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

கிளார்க் 45 பந்துகளில் 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 63 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும், ஹடின் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பிரான்சிஸ், ஜெயசூரிய, சிமித் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதையடுத்து கடினமான வெற்றி இலக்குடன் - சோமர்செற் அணி களமிறங்கியது. ஆனால் இந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான



சிமித்தும், ஜெயசூரியவும் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து அவுஸ்ரேலிய அணியைத் திணறடித்தனர்.

46.5 ஓவர்களிலேயே சோமர்செற் அணி 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 345 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றி பெற்றது.

சிமித் 74 பந்துகளில் 17 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 108 ஓட்டங்களையும், ஜெயசூரிய 79 பந்துகளில் 9 பவுண்டரிகள், 3 சிக்ஸருடன் 101 ஓட்டங்களையும், பிரான்சிஸ் 23 ஓட்டங்களையும், பிளக்வெல் 25 ஓட்டங்களையும், வூட் 17 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஹிப்ட்ரேத் 38, கசாட் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மக்ரா, ஹஸ்சே ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும், வற்சன், கிளார்க் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# விளையாட்டு

# முதல் முறையாக யாழ்.மண்ணில் விரைவு நகர்த்தல் சதுரங்கப் போட்டி!

## சம்பியனானார் சிவோதயன்



யாழ்ப்பாணம் —

விரைவு நகர்த்தல் சதுரங்கப் போட்டி முதல்முறையாக யாழ் மண்ணில் கடந்த 4ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

சர்வதேச தரப்பட்டியல் வீரர் ஒருவர் உட்பட பலரும் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியின் ஆரம்பம் முதலே வீரர்கள் சதுரங்கக் கடிகாரத்தில் விளையாடினர். ஒருவருக்கு தலா 30 நிமிடங்கள் என்ற ரீதியில் நேரம் வழங்கப்பட்டது. இதனால் போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது.

விலகல் முறையில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொண்டனர். இந்தப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஹரி கஸ்பரோவ் சதுரங்க அக்கடமி செய்திருந்தது.

இந்தப் போட்டியின் அனைத்து ஆட்டங்களிலும் வென்றதன் மூலம் விரைவு நகர்த்தல் சதுரங்கச் சம்பியனாக வீ.ரி. எஸ்.சிவோதயன் தெரிவானார்.

இந்தப் போட்டியில் இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களை முறையே எஸ்.வல்லவக்குமரன், டொக்ரர் ரி.திவாகரன், ரி.திறோஜன், என்.சோதிநாதன் ஆகியோரும்,

ஆறாம், ஏழாம், எட்டாம், ஒன்பதாம் இடங்களை முறையே எஸ்.செல்வவிநாயகம், என். கௌஷிகா, பி.இரஜீவன், ஏ.இரதன் ஆகியோரும் பெற்றனர்.


இந்தப் போட்டியின் ஆரம்ப வைபவமாக ஹரிகஸ்பரோவ் சதுரங்க அக்கடமியில் பயிற்சியினை பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் இடம் பெற்றது. இந்தச் சான்றிதழ்களை யாழ்.போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணரும், சதுரங்க வீரருமான என். ஜெயக்குமாரனும், ஹரிகஸ்பரோவ் சதுரங்க அக்கடமியின் முகாமைத்துவப் பணிப்பாளர் சி.வித்தியாதரனும் வழங்கி கௌரவித்தனர்.



நெதர்லாந்தில் உள்ள டோடின்கமில் நடந்த பிபா சர்வதேச சம்பியன்ஷிப் உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்பெயின் வீரர் அல்பியோல் ரால் (இடது), சிலி வீரர் ரிகார்டோ பராடா முன்னேறுவதைத் தடுக்க முயல்கிறார். இந்தப் போட்டியில் ஸ்பெயின் 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# கங்கூலிக்கு வழங்கிய தண்டனை: ஐ.சி.சி. மீள்பரிசீலனை செய்யும்!

## இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் நம்பிக்கை



சண்டிகார் —

கங்கூலிக்கு விதித்த தடையை உடனே ரத்துச்செய்யவேண்டும். இதுவரை அவர் அனுபவித்ததேபோதும் என்று இந்திய கிரிக்கெட் சபை தலைவர் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபை தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா நேற்றுமுன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

இந்திய கிரிக்கெட் அணி கப்டன் கங்கூலிக்கு 6 போட்டிகளில் ஆட தடை விதிக்கப்பட்டது மிகக்கடுமையான தண்டனையாகும். இந்தத் தண்டனையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ரத்துச்செய்யும் என்று நம்புகிறேன்.


ஒரு அணி மெதுவாக பந்து வீசியது என்பதற்காக அந்த அணியின் கப்டனுக்கு இவ்வளவு அதிகபட்ச தண்டனை கொடுத்தது சரியல்ல. கங்கூலி ஏற்கனவே 2 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாட முடியாமல் இந்த தடை உத்தரவு அவரை தடுத்துவிட்டது.

எனவே கங்கூலி அனுபவித்துவிட்ட தண்டனை போதுமானது. உடனடியாக அவருக்கு விதிக்கப்பட்ட தடையை ஐ.சி.சி முடிவுக்கு கொண்டுவரவேண்டும். இந்த விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் சபை முழுமையாக கங்கூலியை ஆதரிக்கும். இது தொடர்பாக ஐ.சி.சியுடன் நாங்கள் முக்கிய பேச்சு நடத்தவிருக்கிறோம்.

இந்திய கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக கிரேக் சப்பலை வெற்றிகரமாக தேர்வுசெய்து விட்டோம். இதற்குப் பிறகு பந்துவீச்சு பயிற்சியாளர் என்று பந்துவீச்சுக்கென தனி பயிற்சியாளர் தேவையில்லை. அப்படி யாரையும் நியமிக்கின்ற யோசனையும் கிரிக்கெட் சபைக்கு இல்லை. எல்லாவற்றையும் கிரேக் சப்பல் கவனித்துக்கொள்வாரெனத் தெரிவித்தார்.

இதேவேளை, பயிற்சியாளர் கிரெக் சப்பல் நேற்றுமுன்தினம் காலை அவுஸ்ரேலியாவிலிருந்து விமானம் மூலம் மும்பை வந்துசேர்ந்தார். விமான நிலையத்தில் அவரை பேட்டிகாண நிறைய நிருபர்கள் வந்து காத்திருந்தனர். ஆனால் சப்பல் அவர்களைச் சந்திக்காமல் சென்றுவிட்டார்.

செப்பல் நேற்றுமுன்தினம் மாலை விமானம் மூலம் பெங்களூர் சென்றார். அவர் விரைவில் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவிருக்கிறார்.



ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த ஜாம்பவான் டீகோ மரடோனாவின் உதைபந்தாட்ட வாழ்க்கையை செய்திப்படமாக தயாரிக்கிறார் சரஜீவோவைச் சேர்ந்த சினிமா இயக்குனர் எமிர் குஸ்துரிகா. அதற்காக பெல்கிரேட்டில் (செர்பியா) உள்ள ரோட் ஸ்ரார் ஸ்ரேடியத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற படப்பிடிப்பில் பந்தை உதைத்து திறனை வெளிப்படுத்துகிறார் மரடோனா.

## சங்கமம் நிகழ்வு

வடமராட்சி

வடமராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு - நேற்று முன் தினம் நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் கோவில் மண்டபத் தில் செயலாளர் துரை சத்தியசீலன் தலைமை யில் நடைபெற்ற து.

இதில் மங்கள விளக்கை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பன், உடுப் பிட்டி அரசியற்துறைப் பொறுப் பாளர் ரமேஸ், வடமராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் துரை சத்தியசீலன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக்கொடியை யாழ். மாவட் துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் கண் ணன் ஏற்றிவைத்தார்.

மாவீரர்கள் மில்லர், நளா யினி ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரை மாவீரர்கள் றோமின் தந்தை யும், தமிழ் நம்பியின் தாயாரும் ஏற்றிவைத்தனர். (12)

# மக்களின் போதிய ஒத்துழைப்பின்றி சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியாது

## வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ்

வலிகாமம்

எமது தாய் தந்தையர், மூதா தையர்கள் மரங்களை நட்டு சூழலைப் பாதுகாத்தனர். ஆனால் இன்றைய பரம்பரை அவற்றை அநாவசியமாகத் தறித்து, தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவ தால் சூழல் மாசடைவதோடு, நல்ல காற்றையும் சுவாசிக்க முடியாத நிலை தோன்றியுள்ள தாக வலி.மேற்கு பிரதேச செய லர் சீ.ஏ.மோகன்றாஸ் குறிப்பிட் டார்.

சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டுக் கடந்த புதன் கிழமை வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மரக்கன்றுகள் விநியோகத் தின்போது அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற் றுகையில் -

இயற்கை அனர்த்தங்கள், யுத்த சூழ்நிலைகள் போன்ற காரணிக ளால் இயற்கை வளங்கள் பெரும் பாதிப்படைந்தன. வியாபார நோக்கத்துக்காவும், வேறு அநா வசியத் தேவைகளுக்காகவும் மரங்கள் தறிக்கப்படுவது வேத னைக்குரியதொன்றாகும்.

எமக்காக மட்டுமன்றி, எமது வருங்காலச் சந்ததியினருக்காக வும் நாம் மரங்களை நட்டு வளர்த்தெடுக்க வேண்டும்.

தற்போது மரங்களை நடுங் கள், பராமரியுங்கள் என்று நாம் நிர்ப்பந்திக்க வேண்டிய நிலை யிலேயே மக்கள் செயற்பாடு அமைந்துள்ளது.

இவ்வாறான சிந்தனை மாற்ற மடைய வேண்டும். தாமே சிந் தித்து, தமது தேக ஆரோக்கியத் தைப் பேணுவதற்கும், நல்ல காற்றையும், நல்ல சூழலையும் பெறுவதற்கு ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

மக்களின் ஒத்துழைப்பு இருந் தால்தான் சூழலைப் பாதுகாக்க முடியும். இங்கு எம்மால் விநி யோகிக்கப்படும் மரக்கன்று களை நடுவதோடு மட்டும் நின்று விடாது, அதனை வளர்த்தெடுத் துப் பராமரிக்க வேண்டியதும் மக்களின் கடமையாகும்.

மக்கள் தாமாகவே மரங் களை வாங்கி நட்டுப் பராமரிக்க மாட்டார்கள் என்ற நோக்கத் தில், அவர்களுக்கு மரங்களை விநியோகிக்க பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முயற்சி கள் எடுத்துள்ளமை பாராட்டக் கூடியதொன்றாகும் என்று கூறி னார்.

இந்த நிகழ்வில் வலி.மேற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் இணைப்பாளரும் கலந்து சிறப்பித்தார். நூற்றுக்கு மேற்பட்ட மலைவேம்பு, மரு தம், சவுண்டி போன்ற மரங்கள் விநியோகிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கதாகும். (48)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ஜெ.டினோசன்

முகவரி : நெல்லியடி.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

# சுகாதார மேம்பாடு குறித்த அவசர கலந்துரையாடல்

வலிகாமம்

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சுகாதார தொழி லாளர் மற்றும் வருமான மேற் பார்வையாளர் ஆகியோருக் கான அவசர சுகாதார மேம் பாட்டு கலந்துரையாடல் இன்று நண்பகல் 12 மணிக்கு, பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசெப் சாந்தசீலன் தலைமையில் பிர தேச சபை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பிரதேசத்தின் எதிர்கால திட்டம் தொடர்பாக ஆலோசிக் கப்படவுள்ளதால், அனைவரை யும் தவறாது கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

# பன்னவேலைப் பயிற்சி நிலையம் தும்பளையில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் குடும்ப புனர் வாழ்வு நிலையத்தின் ஏற்பாட் டில் பனை அபிவிருத்தி சபை- அண்மையில் வடமராட்சி தும்பளையில் பன்ன வேலைப் பயிற்சி நிலையமொன்றைத் திறந்து வைத்தது.

குடும்ப புனர்வாழ்வுக்கழக பிராந்திய கள அலுவலர் தலை மையில் இந்தப் பயிற்சி நிலைய திறப்புவிழா வைபவம் இடம் பெற்றது.

இந்த நிலையத்தில் பயிற்சி வழங்கவென பனை அபிவி ருத்தி சபையால் போதனாசிரி யர் ஒருவர் நியமிக்கப்பட்டுள் ளார்.

இந்த நிலையத் திறப்புவிழா வைபவத்தில் குடும்ப புனர் வாழ்வு நிலைய இணைப்பாளர் சிதம் பரநாதன், பனை அபி விருத்தி சபையின் விரிவாக்கல் உத்தி யோகத்தர் கா.கோபால கிருஸ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேச மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டி யெழுப்பும் வகையில், பன்ன வேலை தொடர்பாக மக்க ளுக்குப் பயிற்சி வழங்கவே இந்த நிலையம் திறக்கப்பட் டுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி திங்களன்று வடமராட்சியில் பேரணி

தென்னிலங்கையில் பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பௌத்த பிக்குகள் நடத்திவரும் எதிர்ப்பு நடவடிக் கையைக் கண்டித்தும், பொதுக் கட்டமைப்பை உருவாக்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்தியும் எதிர்வரும் இருபதாம் திகதி வடமராட்சியில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற வுள்ளது.

வடமராட்சி கடற்தொழிலா ளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் பொது அமைப் புகள் இணைந்து இந்தப் பேர ணியை நடத்த ஏற்பாடு செய் துள்ளன.

திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திக்கம் சந்தியில் ஒன்று கூடும் மக்கள் -அங்கிருந்து ஊர் வலமாக சுப்பர்மடம் வரை சென்றடைவர்.

அங்கு தமிழ்த் தேசியத் தலைவருக்கு கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை ஊடாக மகஜர் கையளிக் கப்படும். அத்துடன் வெளிநாட் டுத் தூதுவர்கள், அரச அதிகா ரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கரம்பைக் குறிச்சியில் வேரடி மண் நிகழ்வு

யாழ்ப்பாணம்

கரம்பைக்குறிச்சி மேற்கு மாதர் சங்கமும், அகதிகள் புனர் வாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்தும் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவான வேரடிமண் நிகழ்வு -

நாளை பிற்பகல் 1.30 மணி யளவில் கரம்பைக்குறிச்சி மேற்கு பாலர் பாடசாலை மைதான முன்றலில் மாதர் சங்கத்தலைவி அ.ஜெயராணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத் தர் எஸ்.உமாபாலனும், சிறப்பு விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திட்ட உத்தியோகத்தர் சுஜித்தா, கரம்பைக்குறிச்சி கிராம அலு வலர் திருமதி இ.மனோகரன், எஸ்.கந்தசாமி, என்.ஜெயந்தி ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

# கெயார் நிறுவனம் மேற்கொண்ட சிரமதானப் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம்

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களில் கெயார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சிரம தானப் பணிகள் பூர்த்தியடைந் துள்ளன.

வடமராட்சிப் பகுதியில் - பருத்தித்துறை, பருத்தித்துறை கிழக்கு, வல்வெட்டித்துறை வடமேற்கு, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை வடமத்தி, வல்வெட்டித்துறை வடகிழக்கு போன்ற பகுதிகளில் சுனாமி யால் உருக்குலைந்திருந்த வீதி கள், வீடுகள், கட்டடங்கள், கடல் அணைகள் போன்றவற்றை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனிதவலுவைப் பயன்படுத்தி, சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள் ளன.

அந்தப் பிரதேசங்களில் உள்ள ஆண், பெண் இருபாலா ரையும் சேவையில் ஈடுபடுத்தி, நாள் சம்பளமாக 450 ரூபாவை வழங்கி வந்தது. இதனால் சுமார் 1500 இற்கும் மேற்பட்ட குடும் பங்கள் பயன்பெற்றனர். (20)

# அரச ஊழியர்களுக்கிடையே இலக்கியம் சார் ஆக்கப்போட்டி

நெடுந்தீவு

அரச ஊழியர்களது ஆக்கங்க ளையும், திறமைகளையும் ஊக்கு விக்கும் வகையில் - அரச நிறு வனங்களிலும், இலக்கியத்துறை சார் நிறுவனங்களிலும் உள்ள ஊழியர்களிடையே ஆக்கத் திறன் போட்டியொன்றை கலா சார அலுவல்கள் தேசிய மரபு ரிமை அமைச்சு நடத்தவுள்ளது.

தமிழிலும், சிங்களத்திலும் நடத்தப்படவுள்ள இந்தப் போட் டியில் - சிறுகதைகள், பாடல் கள், கவிதைகள் மற்றும் சிறுவர் கதைகள் என்பன நான்கு பிரிவுக ளில் நடத்தப்படவுள்ளன.

ஆக்கங்கள் யாவும் எதிர் வரும் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளதுடன் -

இது தொடர்பான விண் ணப்பப்படிவமும் திணைக் களங்களுக்கு அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ், சிங்கள மொழிகளில் வரும் ஆக்கங் களுக்கு தனித்தனியே ஒவ் வொரு போட்டிகளுக்கும் 1, 2, 3 ஆம் இடங்களுக்கு முறையே 7500, 5000, 3000 ரூபா பணப் பரிசும், சான்றிதழும் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (113)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்

படையினரால் கைது செய் யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்திலுள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள உறுப்பினர்களின் பாட சாலை செல்லும் மாணவர்க ளுக்கு ஒரு தொகுதி புத்தகப் பையும், சவர்க்காரமும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் இயக் குநர் சறோஜினி சிவச்சந்திர னால் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

இந்தச் செயலை முன்மாதிரி யாகக் கொண்டு, ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்தச் சங்கத்துக்கு உதவ முன்வர வேண்டும் என இந்தச் சங்கத்தி னர் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

# மானிப்பாய் பிரதேசசபைக்கு உழவு இயந்திரம் அன்பளிப்பு!

மானிப்பாய்

வலி.தென்மேற்கு மானிப் பாய் பிரதேசசபையின் கோரிக் கைக்கு அமைய - நிகொட் நிறு வனம் தனது உதவித்திட்டத்தின் கீழ் மானிப்பாய் பிரதேசசபை யின் பாவிப்புக்கென புதிய உழவு இயந்திரத்தை வழங்கி யுள்ளதாக சபையின் செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் தெரிவித் தார்.

இந்த உழவு இயந்திரத்தை நிகொட் நிறுவனத்தின் திட்ட மிடல் பணிப்பாளர் எஸ்.நவ ரட்ண ராஜாவிடமிருந்து பிர தேசசபையின் களஞ்சியப் பொறுப்பதிகாரி த.சிவசுதன் பெற்றுக்கொண்டார்.

மானிப்பாய் பிரதேசத்துக்கு உட்பட்ட குப்பைகூழங்களை அகற்றுவதில் பிரதேசசபை எதிர்நோக்கிவந்த பிரச்சினையை இதன்மூலம் தீர்க்க முடியும் என வும், ஏற்கெனவே தண்ணீர் பௌசர், திண்மக்கழிவு அகற் றும் பௌசர் என்பன இருந்த போதும், பிரதேசசபைக்கென சொந்தமான உழவு இயந்திரம் இல்லாமையால் அதன் பயன் பாட்டையும் முழுமையாகப் பெறமுடியாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## பொதுக்கூட்டமும் உத்தியோகத்தர் தெரிவும்

யாழ்ப்பாணம்

வட இலங்கை பத்திரிகையா ளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நடப்பாண் டுக்கான புதிய உத்தியோகத்தர் தெரிவும் இன்று மாலை 4 மணிக்கு சங்கத் தலைவர் செ.கதிர் காமத்தம்பி தலைமையில் சங் கப் பணிமனையில் நடைபெற வுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தி னர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

**சூழல் மாசானால் வாழ்வே கெடும்!!**




# குழந்தைகள் விடயத்தில் ஜாக்கிரதை

இந்த பிள்ளையோட தொல்லை தாங்க முடியல... இவனை எங்கேயும் கூட்டிக் கொண்டு போகமுடியல என்று முணுமுணுக்கும் பெற்றோர்கள் மிக அதிகம். சிறுவர், சிறுமியர்களை விருந்தினர் வீட்டுக்கு அழைத்துச் சென்றால், அங்கேயும் அவர்கள் செய்யும் குழப்படிகளைத் தாங்க முடியாது. பந்து அடிப்பது, கண்ணாடி ஜன்னல்களை உடைப்பது. பார்ப்பதற்கு அழகாக இருக்கும் பொருட்களை விளையாடத் தருமாறு அடம்பிடிப்பது. பொம்மைகளை அங்கம் அங்கமாகக் கழற்றி விடுவது. நாய், பூனையைப் பிடித்து அதன் முடியை வெட்டி வம்பு பண்ணுவது.. வீட்டில் இருக்கும் பொருட்களை வெளியே கொண்டு போய் விளையாடிவிட்டு அங்கேயே போட்டு விட்டு வந்துவிடுவது இப்படி அவர்கள் செய்யும் குழப்படிகள் ஏராளம்.



சில வீடுகளில் குழந்தைகளுக்கு நிறையச் செல்லம் கொடுத்து வளர்த்து விடுகிறார்கள். அவர்கள் எவ்வளவு பெரிய பொருட்களை உடைத்தாலும், அதைப் பெற்றோர் தட்டிக் கேட்பதே இல்லை. நம்ம பிள்ளை தானே செய்தான் என்று விட்டு விடுகிறார்கள்.



சில பெற்றோருக்கே சுதந்திரத்தின் எல்லை தெரியாது. உறவினர் வீட்டுக்கோ, நண்பர்கள் வீட்டுக்கோ செல்லும்போது வாசல் கதவு பூட்டாமல் இருந்தால், அப்படியே அதைத் தள்ளித் திறந்து கொண்டு அக்கம் பக்கம் பார்க்காமல் படுக்கை அறை வரை சென்று விடுவார்கள். அந்தப் பழக்கம் அவரது குழந்தைகளிடம் அப்படியே வளரும். இது மோசமான முன்னுதாரணம் ஆகும். பெற்றோர் குழந்தைகளுடன் அடுத்த வீடு சென்றால், அவர்கள் அனுமதி இல்லாமல் அங்கேயுள்ள விளையாட்டுப் பொருட்களை தொடக் கூடாது என்பதைக் குழந்தைகளுக்கு முதலிலே சொல்லிக் கொடுக்க வேண்டும். குழந்தைகளை எப்போதும் மிரட்டி, தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டுமா?

அப்படிச் செய்ய வேண்டாம். விபத்துக்களை உருவாக்காத அளவுக்கு; விபத்துக்களால் சிக்கிக் கொள்ளாத அளவுக்கு குழந்தை விளையாடட்டும் இதில் எல்லை மீறினால் மட்டும் தலையிடுங்கள். ஆனாலும் அவர்கள் விளையாடுவதைக் கண்டு கொள்ளாதது போல நடித்தபடி கவனித்துக் கொண்டிருங்கள். சில குழந்தை களை அளவுக்கு மீறி மிரட்டி பேசாதவகை மாற்றி விடுவார்கள். அவ்வாறான குழந்தை விருந் தினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்றால், வாய் திறந்து ஒரு வார்த்தை கூட பேசாமல், கல்போல உட்கார்ந்து இருப்பார்கள். இந்த மாதிரிப் பேசா மடந்தையாக குழந்தைகளை மாற்றினால் அவர்களின் மனோபாவம் சிதைந்துபோகும். அது போல குழந்தைகள் தேநீர் என்றால் அரைக் கப் தான் குடிக்க வேண்டும். இரண்டே இரண்டு பிஸ்கட் தான் சாப்பிட வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கக் கூடாது. ஆனால் தேவைக்குச் சாப்பிடுவதில் தப்பில்லை.

(தொடரும்)

# வாழ்க்கையில் ஒரு ஏவுகணை

நீங்கள் எத்தகைய இலட்சியமோ, ஆசையோ, திட்டமோ இல்லாமல் அலைந்து கொண்டிருப்பவர்கள் அல்ல.

தொழிலில் இன்னும் பல படிகள் முன்னேற வேண்டும். இன்னும் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும். வீட்டுக்கும், நாட்டுக்கும் நல்ல மதிப்புள்ள மனிதனாக வளர வேண்டும். என்ற ஆசை நம் எல்லோர் மனதிலும் குறிக்கோளாக இருக்கும்.



நடைமுறை வாழ்க்கையிலுள்ள பணிகளை வெற்றிகரமாகத்திட்டமிடுதலின் மூலம் தான் மனிதனால் இந்தக் குறிக்கோளை அடையமுடியும்.

அன்றாடம் பகலிலும், இரவிலும் செய்து முடிக்க உங்கள் மனதில் பல பணிகள் ஞாபகமாக இருக்கலாம். அவற்றை மறந்து போகாது, தினமும் ஒரு டயறியில் எழுதி வைத்துக் கொண்டு அதைப்பற்றி சில நிமிடங்கள் அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

உங்களுடைய இலட்சியத்துக்கோ, வளர்ச்சிக்கோ, அன்றாட நடவடிக்கைகளுக்கோ சிக்கலைக் கொடுக்கும் பயனற்ற பணிகளை அதிலிருந்து அகற்றி விட வேண்டும். இதுமிக மிக கண்டிப்பான ஒழுங்குமுறையாகும். இதைச் சரியாகச் செய்து வந்தால், வாழ்க்கையில் என்றுமே வெற்றிதான்.

எந்தப் பணி அவசியமில்லை என்று தவிர்க்க விரும்புகிறீர்களோ? அதை விட்டு விடுவதனால் உங்களுக்கு அதிக காலமும், நேரமும், பணமும், மனவலிமையும் மிகுதியாகும். அவசியமற்ற தேவைகளிலிருந்து கண்டிப்பாக இருந்தால், உங்களுடைய வாழ்க்கை உங்களுக்கு மட்டுமே அடிமையாக இருக்கும்.

இத்தகைய கட்டுப்பாடுகள் கடுமையானவை என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் அடுத்தவனுக்கு அடிமையாக நேரிடும். பயனற்ற நட்பு, போக்குவரத்து, விருந்துபசாரம் இவைகளால் இன்னும் பல பிரச்சினைகள் உருவாகுமே அன்றி வேறில்லை.

உங்களுக்கும், உங்கள் குடும்பத்துக்கும், மதிப்புள்ளவராகவும், பயன் மிக்கவராகவும் உங்களை ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றால், அன்றாட வாழ்க்கைத் திட்டமானது அவசியமான பணிகளில் மட்டும் இருத்தல் அவசியமாகும்.

பயனற்ற காரியங்களை ஏவுவதற்குப் பலர் கூட வரலாம். அவர்கள் யாவருமே வெற்றிப் பாதையிலுள்ள தடைகளாக எண்ணிக் கொள்ளுங்கள்.

நாம் சிரிக்கும் போது கூடிச் சிரித்தவர்கள் கூட, நாம் அழும் போது சேர்ந்து அழமாட்டார்கள் இந்த உலகில். உறவுகள் வெறும் குலவுவதற்கும், விலகுவதற்கும் மட்டும் தான்.

மனிதனாகப் பிறந்தவர்கள் பணத்தை மட்டுமல்ல, பண்பான வாழ்க்கை நெறிகளையும் கற்றுக் கொள்ளவேண்டும். அதற்கான ஒரு வாழ்க்கைத் திட்டம் அவசியமாகும். வரவுக்கு ஏற்ப செலவு செய்வது போல, நாம் இந்த உலகில் பிறந்து - இறப்பிலிருந்து ஒரு அர்த்தம் இருக்க வேண்டும்.

எதற்காக நாம் பிறந்தோமோ அந்தப் பணிகளை மட்டும் நாம் செய்தால் தான், வாழ்க்கையில் வெற்றி . வாழ்க்கையில் எமது செயல்களே அதற்கு மதிப்பை நிர்ணயிக்கின்றன. செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்து அமைவன. எண்ணங்களை கண்டிப்பாகச் செய்தால் நீங்களே உண்மையான மனிதன்.



ஆதிலட்சுமி சிவகுமார்

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

(சென்றவாரத் தொடர் ச்சி...)

ஒரு பெண் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுபவர். ஆனால், குடும்பப் பிரச்சினையை வெளிப் படுத்த விரும்பாதவர். வெளிப் படுத்தினால் பதவியிலிருக்கும் துணைவனுக்குக் கௌரவமில்லை என நினைப்பவர்.

'நானும் ஒரு நாளைக்கு ஆத்திலையோ குளத்திலையோ தான் மிதப்பன்...' என்பார்.

ஒருநாள் இவர்களுடைய குடும்பப் பிரச்சினையால் இவர்களுடைய மூன்று பிள்ளைகள் கல்வியில் பின் தங்கியிருக்கிறார்கள்.

'நீங்கள் ஆத்தில், குளத்தில் விழறதை விட கோட்சில் ஏறிப் பார்க்கலாமே....' என்று கேட்டேன்.

'அது எவ்வளவு அவமானம்?..' பிள்ளையளுக்கும் மரியாதையில்லை என்றார்.

'தற்கொலை செய்வது அவமானமில்லையா?...' என்றேன்.

மௌனமாகவிட்டார்.

மானம் பார்க்காமல், மரியாதை பார்க்காமல் தெருவில் இழுத்துப் போட்டு பெண்ணை அடிக்கிறான். பெண் அவனை நியாயம் கேட்பது மரியாதைக் குறைவாக நினைக்கிறான் என்று நினைத்தபோது மனது வலித்தது.

பெண்களின் பாதுகாப்புக் கேள்விக் குறியாகவே இருக்கிறது. இதில் பன்னிரெண்டு, பதின்மூன்று வயதுப் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. தரம் ஏழில் கற்கும் மாணவி ஒருவர் அண்மையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டதாக நாமெல்லோரும் பத்திரிகையில் படித்தோம். ஆத்திரப்பட்டோம். இந்தப் பருவத்திலுள்ள பெண், ஆண் பிள்ளைகளைப் பாதுகாக்கும் மிகப் பெரும் பொறுப்பு நிச்சயமாக ப் பெற்றோருக்கே உரியது. கிராமங்களில் இந்தப் பருவத்தினரை 'இரண்டுங் கெட்டான் வயது' என்று சொல்லுவார்கள்.

இந்த வயதிலுள்ள பிள்ளைகளைப் பாடசாலைக்கு, ரியூசன் வகுப்புகளுக்கு, கடைகளுக்கு அனுப்பும்போது அவர்களைத் துணையுடன் அனுப்புகிறோமா? அல்லது இவர்கள் பாடசாலையால், ரியூசனால் வந்ததும் அரவணைத்து நடந்தவற்றை அறிகிறோமா? இவர்களின் மனங்களில் ஏற்படும் சின்னச் சின்ன ஐயங்களுக்குப் பொறுப்புணர்வோடு பதில் சொல்கிறோமா? என்று பெற்றவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தங்களின் வயதுக்கு மீறிய சினிமாப்படங்களைக் காட்சிகளை பார்க்கிற, அறிகிற சந்தர்ப்பங்கள் மிக அதிகமாக இப்போது உள்ளன.

அண்மையில் சந்தி ஒன்றில் புதுமணத் தம்பதி ஒன்று வீடியோப் படப்பிடிப்புக்காக (தனிப்பட்ட முறையில்) கட்டிப் பிடித்து நடனமாடியதைப் பல சிறுவர்கள் கூடிநின்று பார்த்தார்கள்.

எங்களுடைய இளையதினரின் பக்குவத்துக்கு இந்த ஒன்றை உதாரணமாகக் கூறினால் போதாதா?

இப்போதுள்ள தலைமுறைதான் கெட்டுக் குட்டிச்சுவராகிப் போகிறதென்றால், எதிர்கால சந்ததியுமா இப்படி நாசமாகிப் போகவேண்டும்.

எனக்கு மிகவும் பழக்கமான 37 வயதான ஒரு தாயாரை நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்தேன். என்னைக் கண்டதும் அவர் விம்மி வெடித்து 'ஓ'வென்று அழுதார்.

(தொடரும்...)

# சுனாமி - ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(11 ஆம் அத்தியாயம்)

எனக்கு இன்றைக்குப் புதிய பாடசாலைக்குப் போகவேணும். கொஞ்சம் பயமாக இருக்கிறது. அம்மாதான் கூட்டிக் கொண்டு போக வேணும். ஆனால் அம்மா அவள்! இன்னும் நித்திரையால் எழும்பாமல் படுத்திருக்கிறாள். நான் கிட்டப் போய் அவளைத் தொட்டுப் பார்த்தேன். உடம்பு நெருப்புத்தணல் போலச் சுட்டது!.

'அம்மா!... அம்மா!'

நான் கூப்பிட்டது அம்மாவுக்குக் கேக்கவில்லை! பேசாமல் அசையாமலே கிடந்தாள். அவளுக்குப் பக்கத்தில் படுத்திருந்த தங்கச்சி எழும்பிக் கண்ணைக் கசக்கினாள்!.

'அண்ணை! அம்மாவை எழுப்பாதை! அவவுக்கு நல்ல காய்ச்சல்!'

'உனக்கெப்படித் தெரியும்?'

'நேற்றிரவு மீசைக்காரமாமா கூட்டிக் கொண்டு போய் மருந்து எடுத்துக் கொண்டு வந்தவர்!'

எனக்குக் கோவம் வந்தது!..

'ஏனடி என்னை எழுப்பல?'

'நீ நல்ல நித்திரை! அதுதான் உன்னை விட்டிட்டுப் போட்டு வந்தும்!'

'அப்ப நீயும் கூடப் போனனியோ'

என் குரலில் ஒரு அதட்டல் இருந்தது!

'நான் மீசைக்காரமாமா வர முழிச்சிட்டன்! அம்மாவை அவர் தொட்டிட்டுக் கூட்டிக் கொண்டு போக வெளிக்கிட, நானும் வரப் போறன் எண்டு சொன்னனன்!'

'என்னையும் நீ எழுப்பியிருக்கலாம்!'

என் குரலில் ஒரு தொய்வு. இப்ப அம்மா சற்று அசைந்தாள். எங்கடை சத்தம் அவளின்ர நித்திரையைக் குழப்பிப்போட்டுது!

தம்பி!... தம்பி!...

அவள் மெல்லிய குரலில் கூப்பிட்டாள்! நான் கிட்டப் போனன்.

'என்னம்மா!... என்னவேணும்!..

அம்மா கஷ்டப்பட்டுச் சொன்னாள்!'

'ராசா!.... நீ... இண்டைக்கு ... பள்ளிக்குப் போகவேணும்'

'அம்மா! உனக்குக் காச்சல்! நான் ஆரோடை போறது?'

'மாமா ... வந்து உன்னைக் கூட்டிப் போவார்....

எனக்குக் கொஞ்சம் புளுகமாயிருந்தது. இன்றைக்கு காரிலை போகலாம். எனக்கு மீசைக்கார மாமாவில அவ்வளவு விருப்பமில்லை. ஆனால் அவரின்ர காரில நல்ல விருப்பம். முந்தி அப்பாவோட வீட்டை அடிக்கடி வருவார். எங்கட அப்பா! அவர் ஒரு விசித்திர மானவர். வீட்டிலை இரவில நிக்கமாட்டார். அவருக்கு இரவு வேலையாம்! பகலிலையும் முழு நேரமும் நிக்கமாட்டார். ஆனால் அவர் வரும் போது அப்பிள்பழம், தோடம்பழம், பிஸ்கட், எல்லாம் கொண்டு வருவார். ஏதோ கப்பலிலை வேலை எண்டு அம்மா சொன்னா! தங்கச்சி பிறந்த பிறகு அவர் அதிகம் வாறதில்லை. ஆனால் மீசைக்காரமாமா மட்டும் அடிக்கடி இரவில் வருவார். அம்மாவோட கனநேரம் கதைச்சுக் கொண்டிருப்பார். தங்கச்சியைத் தூக்கி மடியில வைச்சுக் கொண்டிருப்பார்.

அண்டைக்கு ஒரு நாள் மீசைக்கார மாமா வந்த போது அப்பாவும் கூட வந்தார். நான் அவையள் கதைக்கிறதை ஒட்டுக் கேட்டுக் கொண்டு நிண்டன்.

'ஐயா வீட்டை எழுதிவைச்சுப் போடுங்கோ! அதையும் கெதியாச் செய்து போடுங்கோ' மாமா கொஞ்சம் அதிகாரக் குரலில் சொல்ல, அப்பா சொன்னார்.

'ரவுணுக்கை கட்டின வீட்டை நான் எழுதி வைக்கிறன். பிறகு என்னைத் தொந்தரவு செய்யக் கூடாது'

அதைக் கேட்டுப் போட்டு அம்மா அப்பாவுக்குக் கிட்டப் போய் நிண்டு சொன்னா!

'அவ இதுக்குச் சம்மதிப்பாவே!'

'அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுறாய்!'

'இல்லை! புது வீடு! அது தான் கேட்டன்'

'அந்தக் கவலை உனக்கு வேண்டாம்!'

அப்பா முடிவு சொல்ல அம்மா அப்பாவின்ர கையைக் கிள்ளிவிட்டுப் போனா! மீசைக்கார மாமாவுக்கு அது பிடிக்கவில்லை என்பதை அவர் முகம் சொன்னது. நான் அதுக்குப் பிறகு அவையின்ர கதையைக் கேக்கவில்லை!'


'என்ன ராசா கடுமையா யோசிக்கிறாய்'

ஒண்டும் இல்லையம்மா!

நான் சொல்லிவிட்டுப் பள்ளிக்கூடம் போக ஆயத்தமானேன்! வாசலிலை கார்ச்சத்தம் கேட்டது. மாமாதான் வந்தார்! தங்கச்சியும் அவரைக் கண்ட உடனை முகம் கழுவ ஓடினாள் மாமாவின்ரை கையில இடியப்பப் பாசலும், போத்தலிலை பால்த் தேத்தண்ணியும் இருந்தன. அவர் அதை என்னட்டைத் தந்தார்.

'இரண்டு பேரும் கெதியாச் சாப்பிட்டு வெளிக்கிடுங்கோ!'

நான் பார்சலைப் பிரிச்சன். இடியப்பமும் சம்பலும் தான்! இதென்ன சாப்பாடு! அம்மா எண்டால் இடியப்பத்துக்கு முட்டைச் சொதியும், இறால் பொரியலும் வைப்பாள். நல்லா இருக்கும். எனக்குத் திடீரென அப்பாவின்ர ஞாபகம் வந்தது! அப்பா வந்தால் அம்மாவின்ர சமையல் ஊர் முழுக்க மணக்கும்! அவருக்கு விளைமீன் தீயல் எண்டா நல்லவிருப்பம்! ரசித்துச் சாப்பிடுவார். அவர் இப்ப வீட்டை வாறதில்லை. அம்மாவைக் கேட்டால் ஏதோ சொல்லி மழுப்பிறாள்! அவர் கடைசியா வீட்டை ஒரு வெள்ளிக்கிழமை மத்தியானம் வந்திருந்தார்.



நான் பள்ளிக்கூடம் விட்டு வீட்டை வந்த போது, கூடத்துக்கை அவர் பாயிலை படுத்திருந்தார். அம்மா குசினியுக்கை சமைச்சுக் கொண்டிருந்தாள். அண்டைக்கும் அம்மா விளைமீன் தீயல் வைச்சிருந்தா. வெள்ளிக்கிழமை எண்டு எங்கடை வீட்டிலை வேறுபாடில்லை. சாப்பிடும் போது அப்பாவின்ர முகம் அவ்வளவு நல்லா யில்லை.!

'என்ன சாப்பாடு சரியில்லையே ! கொறிச்சுக் கொண்டிருக்கிறியள்!'

சீ! அப்படியில்லை எனக்குப் பசியில்லை!'

அப்பாவின்ர பதிலில் அம்மாவுக்கு ஏதோ தெரிந்தது!

'வீடு எழுதிப் போட்டு ஏன் வீணாக் குழம்பிறியள்!'

'நான் சொன்னபடி செய்து போட்டன்! இனி நீ அங்கை போய் இருக்க இப்ப ஆசைப் படாதை!'

'ஏன் அப்படி! எத்தினை நாளைக்கு இந்த தகரவீட்டிலை நான் இருக்கிறது!'

'கொஞ்ச நாள் பொறு! பக்குவமா அவயளை வேற வீட்டுக்கு அனுப்பிப் போட்டுச் சொல்லுறன்!'

'அதை உடனடியாச் செய்யுங்கோவன்!'

அப்பா ஒன்றும் பேசவில்லை. எழும்பிக் கழுவிப் போட்டுப் போய்விட்டார். போகும் போது அவருடைய நடையில ஒரு தடுமாற்றம் தெரிந்தது. அந்தக் காட்சி என்ர கண்ணுக்கு இப்பவும் நிக்குது. அண்டைக்குப் போன அப்பா பிறகு எங்கட வீட்டை வரவேயில்ல. அவர் வரவேமாட்டாரா என நான் நினைப்பதுண்டு. மாமாவின் குரல் கேட்டது!

'என்னடா சாப்பிடாமல் யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்?'

'முடிஞ்சுது மாமா!'

நான் மிச்சத்தை மடிச்சுக் கொண்டு போய் பின் வளவுக்கை வீசினேன்! அங்கை பெரிய கடல் பரந்து கிடந்தது. காலை நேரம் என்பதால் அமைதியாக இருந்தது. இந்த வீடு கடலுக்குக் கிட்ட இருப்பதுதான் எனக்கு விருப்பம்!

பழைய வீடு ஒரே சேரி மாதிரி! நகர வீடு! சுவரும் தகரம் தான். ஆனால் இந்த வீடு, கல்வீடு பெரிய வீடு. இப்ப கொஞ்சம் குழப்பத்தால உடைஞ்சுபோச்சு. மீசைக்கார மாமா திருத்துவிக்கிறார்! புது வர்ணம் பூசவேண்டும் எண்டு சொன்னவர். புதுப்பள்ளிக் கூடம்! புது வீடு! எனக்கு நல்ல சந்தோஷம்.

'அண்ணா! நேரமாப் போச்சு கெதியா வா!

தங்கச்சி ஓடி வந்தாள்! புதிய வெள்ளைச் சட்டை ! முகம் முழுவதும் பவுடர் அப்பிக் கிடந்தது! சுவருக்குச் சுண்ணாம்பு பூசியது போல!'

'என்னண்ணை சிரிக்கிறாய்!'

'போய் முகத்தைக் கண்ணாடியில பார்!'

அவள் உள்ளே போக, நானும் பின்னால் போனேன்! மீசைக்காரமாமா ஓடி வந்த தங்கச்சியை மறித்து இடுப்பிலே கைகொடுத்து அலாக்கா உயரத் தூக்கினார். அவள்

'ஐயோ! விடுங்கோ மாமா! விழப்போறன்! என்று கத்தினாள். அவர் அவள் கன்னத்தில முத்தம் கொடுத்து விட்டுக் கீழே விட்டார். எனக்கு அவருடைய செய்கை பிடிக்கவில்லை! அவரை என்ன செய்யலாம்!

நான் பேசாமல் அவரைத் தாண்டி அம்மாவிடம் போனேன்! அம்மா எழும்பி இருந்தாள்! தங்கச்சியின்ர முகத்தைத் தன்ர சீலையாலை அழுத்தித் துடைச்சு விட்டாள். அம்மா என்னைப் பார்த்த பார்வையில் ஏதோ பொருள் இருந்தது!

'பிள்ளையள் கெதியா வாங்கோ'

மாமாவின் குரல் முழங்கியது!

'அம்மா போட்டு வாறம்!'

'தம்பி.! ... நீதான் தங்கச்சியைப் பார்த்துக் கொள்ள வேணும்!

கவனம்! அவள்... குழந்தைப்பிள்ளை!'

அம்மாவுக்கு மேலே பேச முடியவில்லை! அவள் கண்களில் நீர் திரண்டது! என்மனம் பதறியது அம்மா! அம்மா... நான் அவள் கையைப் பற்றினேன். அது நெருப்புத் தணல் போலச் சுட்டது

'அப்பன் ! போட்டு வா!.. ராசா!'

அவள் மெல்லச் சாய்ந்து படுக்க நான் போர்வையால் போத்தி விட்டேன்!

ராசா!... என்ர குஞ்சு!...

என்னம்மா.!...... என்னவேணும்

அவள் ஏதோ பேச நினைக்கிறாள்!

'நீ பிறகு ... வா நான். சொல்றன்!'

'சரியம்மா! போட்டு வாறன்! கட்டாயம் சொல்ல வேணும்!'

சொல்லிவிட்டு நான் புத்தகப் பையுடன் புறப்பட்டேன்! அப்போது என் வயிற்றில் ஏதோ பிசைவது போல உணர்ந்தேன்! அம்மா என்ன சொல்லப் போகிறாள்!.....? (தொடரும்...)

## வெற்றிப்படிகள்

- வெற்றி என்பது ஒரு ஏணி போன்றது. அதனால் ஒவ்வொரு படியாக முன்னேறுங்கள்.
- முடியாது, நடக்காது என்ற வார்த்தைகளைச் சொல்வதைத் தவிருங்கள்.
- பிடிக்காததை ஏற்றுக்கொள்வது தான் கஷ்டம். ஆனால் பிடித்ததை விட்டுக்கொடுப்பதில் அவ்வளவு கஷ்டமல்ல.
- நாளை என்பதும், இல்லை என்பதும் ஒன்றுதான். அதனால் நாளைக்கென எதையும் தள்ளிப் போடக்கூடாது.
- சந்தோஷம் என்பது பணத்தின் மட்டும் வருவதில்லை. அதனால் உலகில் ஒவ்வொரு விடயத்தையும் நேசியுங்கள்.

# மனமே! மீண்டெழுவாய்

போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிப்புக்குட்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.

மனமே! இயற்கை செய்த கொடுமைக்காகக் குரல் எழுப்பும் நீ சுயாதீன மனிதன், மனிதனுக்குச் செய்யும் கொடுமைகளால் வெந்துபோய், நொந்து போய், புறக்கணிக்கப்பட்டு, திக்குத் தெரியாமல், இயங்கமுடியாமல், வாழமுடியாமல், விரக்திக்குட்பட்டு வாழ்வா சாவா எனத் திண்டாடி நடைபிணமாக நடப்போருக்காகக் குரல் எழுப்பமாட்டாயா? என்கிறாயா?

விடுவேனா மனமே! நீதான் அணு அணுவாகச் சாகின்றாய். அம்பு இன்றிச் சொல்லம்பால் குத்தப்படுகிறாய். போர்க்களம் இன்றிப் போர்க்களத்தில் தவிக்கின்றாய். காட்சியின்றித் தோன்றுகின்றாய். மீண்டும் மீண்டும் எழ எழப் புதைக்கப்படுகிறாய். சத்தமின்றி, ஆயுதமின்றி, போர்க்களமின்றி எல்லாம் நீயாகித் தவிப்பதை நான் பார்க்கின்றேன். உன் அருகில் இருந்து பார்க்கின்றேன்.

மனமே! நீ ஏழையாய் இருந்திருப்பின் நீ வளர்ச்சியில்லாவிடினும் மகிழ்வாய் இருந்திருப்பேன் என்கிறாயா? கல்வி கற்காமலும், பதவி பட்டங்கள் கிடைக்காமலும் இருந்திருப்பின் இன்பத்தில் திளைத்திருப்பேன் என்கிறாயா?

குறிப்பாகக் கற்றுப் பதவிக்கு வந்தவர்களின் நிலையால்தான் உன்மனம் உன்னையே வெறுக்குது என்கிறாயா? நீ கற்ற கற்றல் பயன்படி அவர்களை நோக்குகிறாயா? கல்வி ஒருவரின் உள்ளத்திலிருக்கும் இருளை நீக்கி, ஒளியேற்றும் சூரியன் போன்றது என்கிறாயா? சூரியன் எந்தத் தாழ்வின்றி யார், எவர் என்று பாராமல் தன் ஒளியை மற்றவர்களுக்குள் பரப்புவதுபோல், கற்றவர்களும் பரப்பிக் கொண்டிருக்க வேண்டும் என்கிறாயா?

கற்றுக் கற்று உயர்நிலையில் இருக்கும் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களைத் தவிர, ஏனைய அனைவருமே நான், எனது என்கின்ற மாயை - தனக்கும், தன் சார்ந்தவர்களுக்குமாக மறைக்கிறார்களா? மேலாதிக்கம் கொண்டு உனக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டியவற்றைப் பறிக்கிறார்கள் என்கிறாயா? கற்றவர்களுக்குத்தான் எவனை, எந்த இடத்தில், எப்படி மூழ்கடிக்கலாம் என்ற வஞ்சகம் தெரியும். நீதியை அநீதியாக்கத் தெரியும். அநீதியை மறைக்கவும் தெரியும் என்கிறாயா?

மனமே! உன் குமுறல்கள் எல்லாம் பிறரால், குறிப்பாகக் கற்ற சமூகத்தவர்களால் உனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் கொடூரம் உணர்கின்றேன். ஆனால் இந்தக் குமுறல்கள் உன் மனதைத் தாக்கிவிடும். உன் அடி மனதைத் தாக்காமல், அந்த வேதனைக்குள் உன்னை மூழ்கடிக்காமல், உன்னை நீ தேற்றிக்கொள். மனமே! அரசு நற்பண்புள்ள, திருப்திகரமான வாழ்க்கையை ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கவேண்டும். என்பதற்காகவே கல்வியைப் பிறப்புரிமையாக்கி ஒவ்வொருவருக்கும் கல்வியைக் கட்டாயமாக்கியுள்ளது. கல்விக்கான செலவினத்தைத் தானே செலவு செய்கிறது. ஒரு நாட்டின் அறிவு மட்டம் கூடக்கூட வாழ்க்கை வசதிகளை ஒவ்வொருவரும் கூடுதலாக அனுபவிப்பர் என்கிறாயா? மனமே! அது உன் பொதுநோக்கு நியாயமானது. உண்மையும்கூட..

மனமே! உன்னிடம் இருக்கும் திறனைக் கல்வி என்ற அறிவின் வளர்ச்சியால் வெளிக்காட்டி, நீயும் ஒரு அரச கடமை செய்யும் ஊழியனாகினாய். அதே போல் உன்னைச் சார்ந்தவர்களும் அரச பதவிக்கு வந்தனர்.

அரச பணி செய்பவர்கள் எல்லோரும் மக்கள் சேவை செய்வதற்கென்றே அமர்த்தப்படுகிறார்கள். நிர்வாகத்தை ஒழுங்கமைத்து, நல்பெறுபேற்றை அடைவதைக் கருத்திற்கொண்டே கல்வி, தொழில் அனுபவங்களின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படுகின்றன என்பதையும் நீ அறிவாய்.

பதவிகள் நீ பெரிது, நான் பெரிது என்பதற்கன்றி, ஓர் இலக்கை அடைய, அதைச் செயலாற்றி, நிறைவேற்றுவதற்காகவே என்கிறாயா? உண்மைதான்.

மனமே! நீ வளர்ந்து வளர்ந்து கல்வியில் உயர்வதைக் கண்ட, உண்மைவழி உயரமுடியாதவர்கள் பணமும், செல்வாக்கும், எடுபிடியும் செய்து பதவிகளைப் பெற்றுள்ளமைபோக, உன்னைக் கீழ்த்தரமாக நினைத்து நையப்புடைப்பதும், அலட்சியப் படுத்துவதும் உன் மனதுக்கு வேதனை தருகிறதா?

மனமே! உனக்குள் இருக்கும் திறனை உன்னால் உரைத்துப் பார்க்க முடியும். அதை நீ நம்பு. உன் பலம் கண்டு தன் பலவீனம் நிரப்பவே பணம் ஈந்து, செல்வாக்குப் பெற்று, எடுபிடி செய்து பெறும் பதவி உனக்குமட்டுமல்ல, சமூகத்தினர் மத்தியிலும் நகைப்பிற்கிடமானது. உன் திறனையும், உன் நல்திறன் செயற்பாட்டையும் சமூகம் உணர்ந்துகொண்டிருக்கும். நீ உன் திறனில் நம்பிக்கை வை. உன்னை நசுக்குபவன் உனக்குள் இருக்கும் இறைவனை நசுக்குகிறான் என்று எண்ணிக்கொள். உனக்குள் இருக்கும் நியாயமான, நீதியான வேண்டுதல்கள் ஏற்றுக்கொள்ளப்படும். உனக்குள்ளேயே ராசாவாக இரு. உன்னில் ஆதிக்கம் செலுத்த எவராலும் முடியாது. அப்படியானால் மனித உரிமையில் நியாயம் கேள். துணிவுடன் செல். பயம் வேண்டாம். உன்னை நீ காப்பாற்ற மனமே மீண்டெழுவாய்.

- மலர் சின்னையா -

# உப்பு உற்பத்தி நிறுவனத்தில் அறுவடை விழா!

ஆனையிறவு—

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான அறுவடை விழா - நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் குறிஞ்சாத்தீவு உப்பு உற்பத்தி நிறுவனப் பொறுப்பாளர் புஸ்பராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மற்றும் துறைசார் அலுவலகர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் சம்பிரதாயபூர்வமாக உப்பு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.



அதனைத்தொடர்ந்துதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டுக்கான உப்பு அறுவடை ஆரம்பமானது.

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கிளிநொச்சியில் வானவில் பதிப்பகம் திறந்துவைப்பு






கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் புதிதாக பதிப்பகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வு-நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ச.விநாயகமூர்த்தியின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை ஈழநாதம் பத்திரிகையின் பொறுப்பாளர் சுடர்மணி ஏற்றிவைத்தார்.

பதிப்பக பெயர்ப் பலகையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பதிப்பகக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் நாமகள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பதிப்பகத்தின் முதலாவது பதிப்பை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் பெருமளவிலான கமக்கார அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உலக வங்கி நிதியுதவியுடன் முல்லைத்தீவில் 100 வீடுகள்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் இரண்டரைக்கோடி ரூபா செலவில் நீர்ப் திட்டத்தின் அனுசரணையுடன் நூறு வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் மிகவும் வறுமை நிலையிலுள்ள கிராமங்களான தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், அம்பலப் பெருமாள் குளம், தேறாங்கண்டல் ஆகிய கிராமங்களிலுள்ள நிரந்தர வறிய குடும்பங்களுக்கே இந்த வீட்டுத்திட்டம் அமைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் நற்பயுனை அடையவுள்ளனர். அடுத்த வாரமளவில் இந்தக் கிராமத்தில் புதிய வீடுகளுக்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 3 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

மன்னார்—

தலைமன்னாரில் கடந்த செவ்வாய்க்கிழமை கடற்படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பாக மூன்று தமிழ் இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

செல்லையா நிமலநாதன், ஜெயநாதன், கார்த்திகேசு ஆகிய இளைஞர்களே கைதானவர்களாவர். இவர்கள் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். கைதான இளைஞர்கள் மூவரும் தலைமன்னாரைச் சேர்ந்தவர்களாவர்.

# சேது சமுத்திர கால்வாய் திட்டம் தொடர்பாக பொருண்மிய மதியுரையகத்தில் கருத்தரங்கு

கிளிநொச்சி—

கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தில் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் தொடர்பான ஆய்வுப் பட்டறை - கடந்த செவ்வாய்கிழமை காலை 9 மணியளவில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை பேராசிரியர் சித்திர வடிவேல், சொலிடார் நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.சர்மிளா, பேராசிரியர் சூசை ஆனந்தன், யு.என்.டி.பி பிரதிநிதி அருள் ஞானம், அவுஸ்ரேலியா ரெக்கைச் சேர்ந்த பரஞ்சோதி, சிரான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், லண்டனைச் சேர்ந்த எலிசா மான் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தைச் சேர்ந்த றஞ்சன் ஏற்றி வைத்தார் ஈகச்சுடரை லண்டனைச் சேர்ந்த எலிசா மான் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை பொருண்மிய மதியுரையகத்தின் பணிப்பாளர் மா.சுந்திரமூர்த்தி நிகழ்த்தினார்.

யு.என்.டி.பி. நிறுவனமும் ரெக் நிறுவனமும் இணைந்து நடத்திய இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டோருக்கு இலங்கைக்கான வடக்கு - கிழக்கு சூழல் முகாமைத்துவம் சம்பந்தமான சர்வதேசப் பயிற்சிப் பட்டறைக்கான நூல் வழங்கப்பட்டது.

தொடர்ந்து சேது சமுத்திரக் கால்வாயால் ஏற்படக்கூடிய சர்தக, பாதக நிலை பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் சேது சமுத்திரக் கால்வாய் தொடர்பான விளக்கத்தை சூசை ஆனந்தன் வழங்கினார். நன்றியுரையை பொருண்மிய மதியுரையகத்தின் திட்டமிடலுக்கான இணைப்பாளர் மனோகரன் நிகழ்த்தினார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூன் - 17

1789: -பிரான்ஸில் மதகுருமார்கள் அடங்கிய முதற்பிரிவு, நிலச் சுவாந்தாரர்கள் பிரபுகள் அடங்கிய இரண்டாம் பிரிவு, விவசாயிகள், வர்த்தகர்கள், வழக்கறிஞர்கள் கொண்ட மூன்றாம் பிரிவு என்ற மூன்று பிரிவினரும் இணைந்து தாங்களே 'தேசிய சட்ட சபை' என்ற அறிவிப்பை விடுத்தனர்.

1915: - உலகில் சமாதானத்தை நிலைநாட்ட பிலடெல்பியாவில் சுதந்திர மண்டபத்தில் வில்லியம் ஹோவார்ட் டாஃப்ட் தலைமையில் ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் அமைப்பை உருவாக்குவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

1917: -சைபீரியாவுக்கு சுயாட்சியளிப்பதாக ரஷ்ய அரசு அறிவித்தது.

⃠ உலக புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின் நடித்த முதலாவது படமான 'த இம்மி கிரான்ட்' என்ற திரைப் படம் அமெரிக்காவில் திரையிடப்பட்டது.

1918: - பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டுவந்த பாணின் அளவை வியன்னா அரசு குறைத்ததைத் தொடர்ந்து, பொது வேலை நிறுத்தமும், கலவரமும் ஏற்பட்டது.

1940: -சேர்ச்சில் தனது வானொலி உரையில் 'பிரான்ஸ் போர் முடிந்தது. பிரிட்டனில் போர் இனி தொடங்கப்போகிறது. ஆயிரம் ஆண்டுகள் போர் நீடித்தாலும் நாம் தாங்கிக்கொள்ள வேண்டும்' என நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

1950: -முதன்முதலாக சிறுநீரக அறுவைச் சிகிச்சை சிக்காக்கோவின் ஒரு மருத்துவமனையில் மருத்துவர் நிச்சர்ட் வாலர் என்பவரால் நடத்தப்பட்டது.

1962: - காஸபிளாங்கா கூட்டணி நாடுகளான மொராக்கோ, கானா கென்யா, மாலி, ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகள் என்பன இணைந்து 'ஆபிரிக்க பொதுச் சந்தையை' நிறுவின.

1967: - ஹைட்ரஜன் குண்டை வெடிக்கவைத்து சோதனை நடத்தியதாக சீனா அறிவித்தது.

1971: - இரண்டாம் உலகப் போரில் இருந்து அமெரிக்காவின் மிகப் பெரிய இராணுவத் தளமாக இருந்துவந்த அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் இடையே இருக்கும் தீவான ஒகினாவா தீவை மீளவும் ஜப்பானிடமே ஒப்படைக்கும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1972: -வோட்டர் கேட் ஊழல் என்று செய்தித் தாள்களில் குறிப்பிடப்படும் நிகழ்வு நடந்தது. அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனை மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பதை ஊக்குவிப்பதற்கான முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக வொஷிங்டனில் உள்ள ஜனநாயகக் கட்சியின் அலுவலகமான வோட்டர் கேட்டின் பூட்டை உடைத்து, உள்ளே நுழைந்த ஐந்து திருடர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

1980: -செயற்கைக்கோள் மூலம் கடிதங்களை அனுப்பும் இன்டெல் போஸ்ட் முறைமுலம் முதன்முதலாக லண்டனில் இருந்து கனடாவின் றொறண்டோ நகருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு ஒரு நிமிடநேரமே செலவாகியது.

1985: - பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விண்வெளிப் பயணிகளைத் தாங்கியபடி டிஸ்கவரி 51 ஜி என்ற விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

⃠ நெதர்லாந்தின் தந்தையர் தினம்

⃠ ஐஸ்லாந்து குடியரசு தினம்

⃠ ஜேர்மனியின் தேசியத் தலைவர்கள் நினைவுதினம்

தொகுப்பு - சந்துரு

# நீதி நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து நோர்வே முன்னாள் நீதிபதி புகழாரம்!

கிளிநொச்சி—

கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த நோர்வேயின் ஓய்வுபெற்ற நீதியரசர் காபென்சுமித் நேற்றுமுன்தினம் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பராவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நீதி நிர்வாக நடுவப்பணிமனையில் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நீதி நிர்வாகக் கட்டமைப்புகள் தொடர்பாக இருவரும் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, கிளிநொச்சி சட்டக்கல்லூரி மண்டபத்தில் நீதியாளர்கள், சட்டவாளர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்களுடன் ஒரு மணிநேரம் இடம்பெற்ற கலந்துரையாடலில் நீதி நிர்வாகக் கட்டமைப்புகள், தொடர்பாகவும் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடி, தமது திருப்தியைத் தெரிவித்தார்.

மேலும் நோர்வே மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நீதி நிர்வாக செயற்பாடுகள் தொடர்பாக எடுத்துரைத்த நோர்வேயின் ஓய்வுபெற்ற நீதியரசர், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நீதி, நிர்வாக செயற்பாடுகள் திறம்பட செயற்படுத்தப்படுவது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா னன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்
திருக்குறள்

# நமது நோக்கு

## வரலாற்றுத் தவறு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்காக உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு இன்று பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகிவிட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் சென்றடைவதைத் தடுப்பதற்காகவே - பொதுக்கட்டமைப்பு உருவாவதற்கு ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இதனைச் சாட்டாக வைத்து ஜே.வி.பி., ஆளும் கூட்டணியிலிருந்தே விலகிக்கொண்டிருக்கிறது. பொதுக்கட்டமைப்பு என்ற சாதாரணமானதொரு விடயத்தை பெரும் பூதாகாரமாகக் காட்டி - ஆளும் கூட்டணியில் இருந்து விலகும் அளவுக்கு ஜே.வி.பி. கோரமான இனவாத வடிவெடுத்திருக்கிறது.

இந்த நிலை இலங்கை மீண்டும் மோசமான இனவாத சேற்றுக்குள் புதைய ஆரம்பித்திருக்கின்றதென்ற உண்மையை வெளிச்சம் போட்டுக்காட்டியிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் 1950 களில் இருந்து பல்வேறு வடிவங்களில் முனைப்புப்பெற்று வந்திருக்கிறது.

இதேவேளை, ஜே.வி.பியின் தூண்டுதலில் நடைபெறும் சம்பவங்கள் இனவாதத்தின் இன்னோர் பரிமாணத்தைக் காட்டிநிற்கின்றது.

தமிழ் மக்களுக்கு இயற்கையால் ஏற்பட்ட அழிவுகளுக்கான நிவாரணம் கூடக் கிடைக்கக் கூடாதென்றால் ஜே.வி.பி. எத்தனை காழ்ப்புணர்ச்சியுடன் செயற்படுகின்றது என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

பௌத்த பிக்குகளைத் திரட்டி சந்திரிகாவைப் பணிய வைக்கவும் ஜே.வி.பி. முயன்று பார்த்தது. ஆனால் முடியவில்லை. ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கூட ஜே.வி.பியுடனான கடந்த ஒன்றரை ஆண்டுகால தேனிலவு கசந்துவிட்டதால் தான் அவர்களின் மிரட்டல்களுக்குப் பணிந்து போகாமல் துணிந்து நின்றார்.

இனிமேல்தான் அவர் புதிய சவால்களைச் சந்திக்க நேரிடும். அரசியல் எதிரியான அவர்களுடன் மட்டுமன்றி பௌத்த பேரினவாதத்துக்கும் முகம்கொடுத்தே சந்திரிகா பொதுக் கட்டமைப்பை நிறைவேற்றவேண்டியிருக்கும்.

இது சுலபமானதாக இல்லாவிடினும், சந்திரிகாவிடமுள்ள அதிகாரங்கள் இவற்றையெல்லாம் துரும்பெனக் கருதி நிறைவேற்றக்கூடியளவுக்கு வலிமைவாய்ந்தன.

இந்த அதிகாரங்களை அவர் இதற்கு முன்னர் - தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் தான் பயன்படுத்திவந்தார்.

இப்போதுதான் அரசியல் ரீதியிலான துணிவான முடிவுகளை எடுப்பதற்கு அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்காவினது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு - இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண 10 வருடங்களுக்கு முன்பே முனைந்திருந்தால் இன்றைய நெருக்கடி அவருக்கு ஏற்பட்டிருக்காது.

1995 இல் சந்திரிகாவுக்கு இருந்த செல்வாக்கும் - யுத்தத்தின் மீது சிங்கள மக்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பும் நாட்டுக்கு ஒரு சமாதானத் தீர்வைப் பெற்றுக்கொடுத்திருக்கக் கூடிய சாதகத் தன்மையைக் கொண்டிருந்தன.

அப்போது ஐ.தே.க.கூட செயலற்றதொன்றாகவே இருந்தது. ஜே.வி.பி. ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினருடன் செல்வாக்கேயில்லாச் சக்தியாக இருந்தது.

ஆனால் இந்த பத்து வருட ஆட்சிக் காலத்தில் சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கொடுத்த இழப்புக்கள், துன்பங்கள் ஒருபுறம் இருக்க, அவருக்கே எதிராக அரசியலில் பலம்வாய்ந்த சக்திகள் பல ஊருவாகிவிட்டன.

ஜே.வி.பி. பிரமாண்டமாக வளர்ந்து சுதந்திரக் கட்சியையே விழுங்கிவிடும் நிலைக்கு வளர்ந்துள்ளது.

ஐ.தே.கவும் ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் எல்லா சக்திகளையும் திருப்திப் படுத்திக்கொண்டு ஒரு தீர்வை அமுல்படுத்துவதென்பது சாத்தியமற்றதொன்றாகவே மாறிவிட்டது.

இப்போது பொதுக்கட்டமைப்புக்கு காட்டப்பட்டு வரும் எதிர்ப்புகளை கணிப்பிடும்போது - இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு என்பது எந்தளவுக்கு கல்லில் நார் உரிக்கும் செயலாக இருக்கப்போகிறது என்பதை உணரமுடியும்.

இன்று ஜே.வி.பியை எதிர்த்து பொதுக்கட்டமைப்பை உருவாக்கத் துணிந்த சந்திரிகா, அடுத்தடுத்த கட்டங்களில் என்ன செய்யப்போகிறார் என்ற கேள்வியே இப்போது மேலோங்குகிறது.

அதேவேளை, தமிழ் மக்கள் மீதான சிங்களப் பேரினவாதத்தின் பிடி மேலும் மேலும் இறுகிவருவது நாட்டைப் படுகுழிக்குள் தள்ளுவதற்கான ஒரு அறிகுறியையே வெளிப்படுத்துகிறது.

பொதுக்கட்டமைப்பு, இடைக்கால நிர்வாகம், நிரந்தரத் தீர்வு என்று படிப்படியான தீர்வுகளுக்கு சிங்களப் பேரினவாதம் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளாவிடில் அது அவர்களின் வரலாற்றுத் தவறாகவே அமையும்.

# நாடும் நடப்பும்



## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# புதிய சமாதானத் தேவதை இலங்கையில் உருவாகிறாள்

போர் வருமா என்று கேட்டவர்கள் சிலவாரங்களுக்கு முன் இனக்கலவரம் ஏற்படுமா என்று கேட்டார்கள். இப்பொழுது ஆட்சி நிலைக்குமா? என்று கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கலைப்பதற்காக ஒன்றுசேர்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இப்பொழுது பிரிந்துவிட்டன. இனி என்ன நடக்கும்? என்று கேட்டபடியே வந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன நடக்கும்? எப்படியும் இப்போதைக்கு ஆட்சி கவிழாமல் பார்த்துக் கொள்வார்கள். தேர்தலுக்குப் போவதற்குத் தாங்கள் தயார் என்று சொல்லிக் கொண்டாலும், தேர்தலைச் சந்திப்பதற்குப் பொதுவாக எல்லோருக்கும் பயம்தான். நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், தேர்தலுக்குப் போவதாக இருந்தால் கொஞ்சம் யோசனைதான். பணம் செலவாகுமே!

வாக்காளர்கள் அடிக்கடி தேர்தல் வருவதை விரும்புவார்களா? தேர்தல் என்றால் எவ்வளவு செலவு? என்றாலும், ஆட்சியில் உள்ளவர்களை வீழ்த்துவதும் மீண்டும் ஒரு கட்சியை அல்லது கூட்டணியை ஆட்சிக்குக் கொண்டுவருவதும் ஜனனாயக நாட்டில் ஒரு விளையாட்டாகவும், சில சமயம் பொழுது போக்காகவும் அமைந்து விடுகிறது. கொள்கை அடிப் படையிலா இவர்கள் கூட்டுச் சேர்கிறார்கள் என்றேன்.

சந்திரிகாவின் தகப்பன் ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்ந்திருந்தாலும் டட்லி, சேர் ஜோன், ஜே.ஆர் ஆகியோர் இருக்கும் வரை தாம் நாட்டின் ஆட்சி பீடத்துக்கு வரமுடியாது என்பதை உணர்ந்த போதுதான் ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து வெளியேறி புதிய கட்சி தொடங்கினார். சிங்கள மொழியை அரியணையில் ஏற்றுவதாக வாக்குறுதியை அளித்தால் ஆட்சிக்கு வரலாம் என முடிவு செய்து மொழிவெறியைக் கிளப்பினார். பின்னர் இப்படிப்பட்ட இனவெறி பிடித்தவர்களைச் சேர்த்து மக்கள் ஐக்கிய முன்னணிஅமைத்து ஆட்சிக்கு வந்தார். ஆட்சிக்கு வருவதற்காக அமைத்த ஐக்கிய முன்னணி, கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்தது. முடிவில் பண்டார நாயக்காவே உயிரைப் பலி கொடுத்தார். பண்டார நாயக்காவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த சிறீமா பின்னர் இடது சாரிகளுடன் கூட்டு வைத்தார். பண்டாரநாயக்காவின் கொள்கை அடிப்படையில் கூட்டுச் சேர்ந்து விட்டதாக இவர்கள் சொல்லிக் கொண்டார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

பண்டாரநாயக்காவின் கொள்கை என்று சொல்கிறீர்களே பண்டார நாயக்காவின் கொள்கை என்ன? ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி பீடத்தில் இருந்து வீழ்த்துவது என்பதைத் தவிர, பண்டாரநாயக்காவுக்கு வேறு என்ன கொள்கை இருந்தது? என்று ஐக்கிய முன்னணி அரசிலிருந்து சமசமாஜக் கட்சி வெளியேறிய போது நாடாளுமன்றத்திலேயே, டாக்டர் கொல்வின் கேட்டார் என்றேன்.

இப்போது இதுதான் நடந்தது. ரணில் ஆட்சியைக் கலைத்து தமது கட்சியின் ஆட்சியைக் கொண்டு வருவதற்காக சந்திரிகா அம்மையார் ஜே.வி.பியுடன் கூட் டுச் சேர்ந்தார்.

இப்பொழுது கூட்டமைப்பில் தம்மையே மீறி ஜே.வி.பி முனைப்புக் கொண்டதால், அது போனால் போகட்டும் என்று பொதுக்கட்டமைப்பை கொண்டுவர முடிவு செய்து விட்டார். ஜே.வி.பியை தூக்கி எறிந்து விட்டார் என்றேன்.

இனிஎன்ன ஜே.வி.பி சும்மா இருக்குமா? பொதுக் கட்டமைப்பை இலகுவாக நிறைவேற்றுவதற்கு விடுமா? அம்மையார் நிம்மதியாக ஆட்சிசெய்ய அது விட்டு வைக்குமா? என்று கேட்டார் பரமசிவம்.

எந்தக் கட்சி எதனுடன் கூட்டுச் சேர்ந்தாலும் ஆட்சி பீடத்துக்கு வருவதற்கும் பதவி சுகத்தை அனுபவிப்பதற்காக மட்டுமே கூட்டமைப்பு ஏற்படும். இதனால் கூட்டமைப்பை உடைப்பது மற்றவர்களுக்கு கஷ்டமாக இருக்காது என்றேன்.

இப்பொழுது உடனடியாக ஆட்சி கவிழும் வாய்ப்பில்லை. பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் ஆட்சியை கவிழ்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உதவ மாட்டாது. ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா, மலையக முன்னணியென்று இந்தக் கட்சிகள் எல்லாம் நாடாளுமன்றத்தில் பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக அரசுக்கெதிராகவும், விடுதலைப்புலிகளுக்கெதிராகவும் கூச்சல் போடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். பொதுக் கட்டமைப்புக்கெதிராகவும், கூட இவர்களில் சிலர் குரல் எழுப்புவார்கள். ஆனால் வாக்கெடுப்பில் ஜே.வி.பியும், பிக்குகள் கட்சியும் தவிர எல்லோருமே அரசாங்கத்துக்கு ஆதரவாக பொதுக்கட்டமைப்பை ஏற்று வாக்களிப்பார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது புதிய தேர்தல் நடத்த வேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இப்போது அக்கறை இல்லை. ஜனாதிபதித் தேர்தலை அதுவும் இந்த வருட இறுதியில் நடத்த வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சிக்கு விருப்பம். ரணில் இதற்காகவே காத்துக்கொண்டிருக்கிறார் என்றேன்.

ஜனாதிபதி பதவிக்காகவோ, பிரதமர் பதவிக்காகவோ இனியும் போட்டி போடும் எண்ணம் சந்திரிகா அம்மையாருக்கு இருப்பதாக இப்போது தோன்றவில்லை. நாட்டின் இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணப்பட வேண்டும். சமாதானத் தேவதையாக விளங்க வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு வந்துவிட்டதாகவே தோன்றுகிறது என்று பரமசிவம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

# வாசகர் நோக்கு

## புத்தரின் போதனை?

சகல சுகபோகங்களையும் துறந்து உலக மக்களுக்கு சாந்தியும் சமத்துவமும் சமாதானமும் கிட்டுவதற்கு இளவரசர் சித்தார்த்தர் புத்தரானார்.

புத்தரின் அடிச்சுவட்டில் அவர் போதனைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி வழிகாட்டுவதற்காக தமது சுகபோகங்களைத் துறக்கத் தயாரானவர்கள் உலகின் பல பாகங்களிலும் பிக்குகளாகத் துறவறம் பூண்டனர்.

இந்த நல்ல போதனைகளைப் பார்த்துத் தான் இந்தியாவில் தலித் மக்களைப் புத்தபோதனைகளைப் பிற்பற்றும்படி அறிஞர் டாக்டர் அம்பேத்கர் வழிகாட்டினார்.

இலங்கையில் இன்று புத்ததுறவிகள் காட்டும் வழிகளை டாக்டர் அம்பேத்கர் பார்த்தால் புத்தமே வேண்டாம் நீங்கள் மனிதர்களாக இருந்தால் போதும் என்று சொல்லிவிடுவார்.

பரந்தன் - ஆர்.என்.கோபால்

## வாரநோக்கு

-யாழவன்-

# பேரினவாதத்தின் கொக்கரிப்புகளும் அதற்கெதிரான போராட்டங்களும்

நேற்றைய தொடர்ச்சி...

இன்று தென்னிலங்கையிலே நிலவும் அனேகமான அரசியற் குழப்பங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகாவினுடைய தொலைநோக்கு சிந்தனையற்ற முடிவுகளே காரணமாக அமைந்துள்ளன. முன்னர் தனது கணவரைக் கொலைசெய்த ஜே.வி.பியினர் ஜனநாயக வழிமுறைக்குள் நுழைந்து விட்டதாகக் கூறிக்கொண்ட சூழ்நிலையிலே ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்களையே தம்வசம் வைத்துக்கொண்டிருந்த போது, ரணிலினுடைய அரசைக் கவிழ்த்து, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமெனத் திட்டமிட்ட சந்திரிகா - பொருந்தாத திருமணம் எனக்கண்டும், ஜே.வி.பியினருடன் கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டார்.

அந்தக் கூட்டமைப்பைப் பயன்படுத்தி அதிக லாபத்தை ஜே.வி.பியினர் பெற்றுக் கொண்டனர். பத்திலும் குறைவாக இருந்த தமது நாடாளுமன்ற பலத்தை 39 ஆக அதிகரித்துக் கொண்டு, மூன்றாவது பெரும் அரசியல் சக்தியாக வடிவெடுத்துக் கொண்டதுடன், இனவாத சிந்தனைகளையும், கருத்துகளையும் தென்னிலங்கையிலே தனது பிரசார பிரிவைக்கொண்டு பரப்பத் தொடங்கியது. இதனால் இன்று முழுமையான தொரு இனவாதப் பேய் தென்னிலங்கையிலுள்ள புத்திஜீவிகளுள் அனேகமானோரை ஆட்டிக்கொண்டிருக்கிறது. அதன் விளைவே இன்று பல்கலைக் கழக மாணவர்கள் வீதிக்கு இறங்கப் போகிறார்கள் எனும் சேதியுமாகும்.

இவற்றைவிட அரசினால் முன்னெடுக்கப்பட்டு, தமிழர்களுக்கு சற்று ஆதரவான முடிவுகளைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாத மனப் பக்குவத்திலேயுள்ள ஜே.வி. பியானது - அவற்றை முழுமையாக எதிர்த்து வருவதுடன், அரசிலிருந்து விலகுவோம் என அச்சுறுத்தலையும் விடுத்து, அரசைக் குழப்பி வருகின்றது. ஜே.வி.பியினருடன் கூட்டமைப்பை ஏற்படுத்தப் போய், தனது தனித்துவத்தை இன்று இழந்து நிற்கும் சுதந்திரக் கட்சியானது, எதிர்காலத்திலும் தனித்துநின்று போட்டியிட்டு, போதிய ஆசனங்களைப் பெற முடியாத நிலையே காணப்படுகிறது. இதனால் இலங்கை அரசியல் வரலாற்றிலே அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று, அரசியல் கட்சியொன்று தனித்து ஆட்சி அமைக்கும் நிலை அண்மித்தகாலங்களிலே தோன்றப் போவதில்லை.

இனிவரும் சில ஆண்டுகளுக்கு சிறுபான்மை இனக் கட்சிகளே அரசைத் தீர்மானிக்கும் கட்சிகளாக அமையப்போகின்றன. தற்போதுகூட அவ்வாறானதொரு நிலையே காணப்பட்ட போதிலும், அடுத்துவரும் காலங்களிலே அந்தநிலை மேலும் வலுவடையும். ஏனெனில் அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தல் வரும்போது ஜே.வி.பியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக சுதந்திரக் கட்சி மருந்துக்குக் கூட நினைக்காது. இந்த நிலையில் தென்னிலங்கை சிங்கள மக்களுடைய வாக்குகள் சிதறவேண்டிய நிலை தோன்றும். அதாவது ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி, ஹெல உறுமய என வாக்குகள் சிதறும்போது, ஆட்சி அமைப்பதற்கு சிறுபான்மை இனக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் கட்சிகள், மலையகக் கட்சிகள் என்பனவே முண்டு கொடுக்க வேண்டி ஏற்படும். எதிர்காலத்திலே நாடாளுமன்ற தேர்தல் ஒன்று ஏற்படுமாக இருந்தால் தமிழர்தரப்பு தனது பிரசாரத்தை வடக்கு, கிழக்கில் வலுப்படுத்துவதைவிட மலையகம், கொழும்பு உள்ளிட்ட தமிழ் மக்கள் சேர்ந்துவாழும் பகுதிகளிலேயே வலுவடையச்செய்யவேண்டும். அங்கும் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவானவர்களை வெற்றியடையச் செய்வதன்மூலமாகவே தமது நாடாளுமன்ற பலத்தை அதிகரித்துக்கொள்ளமுடியும். அதேவேளை சிங்கள முற்போக்கு வாதிகளுடன் இணைந்து தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு உண்மைநிலையைத் தெளிவுபடுத்தவேண்டும். இதன்மூலமாக இனவாதிகளினுடைய வெற்றியையும் அதன் அளவையும் சற்றுக் குறைத்துக்கொள்ள முடியும்.

குறிப்பாக, ஆளப்பிறந்து துறவியானவரை வணங்கிக் கொண்டு, துறவியானபின் ஆளப்புறப்பட்ட ஹெல உறுமய பிக்குகளினுடைய வெற்றியையும் தடுத்துக்கொள்ளவேண்டும். தமிழர் தரப்பினர் தமது வெற்றியில் காட்டும் அக்கறையைவிட, எதிர்காலத்திலே தமது தேசியப் போக்குக்கு எதிரானவர்களின் தோல்வியிலே அதிக அக்கறையை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன்வழியேதான் ஜனநாயகத் தீர்வு ஒன்றை எட்டமுடியும். ✉

# இந்த வார பலன்

## 17.06.2005 - 23.06.2005 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் ராகு | | | புத, சுக், சூ |
| யுரே | 17 பி.ப 4-18 துல - சந்<br>19 இ. 9-28 விரு - சந்<br>12 இ. 11-06 தனு - சந்<br>23 ப. 12-06 கட - சுக்<br>23 இ. 10-57 மக - சந் | | சனி |
| நெப் | | | |
| | | | சந், குரு கேது |

### மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இல்வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். பணவருவாய் திருப்திகரமாக அமையும். புத்திரர்களால் மகிழ்ச்சியும், உதவியும் உண்டு. சிலருக்கு வீட்டில் நற்கருமங்கள் நடக்கும். சுற்றாடலில் அமைதி உண்டு. எடுத்த கருமங்கள் சிறப்பாக நிறைவேறும். மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு எடுத்த கருமங்கள் ஒப்பேறும். பதவி உயர்வு கிடைக்கலாம். சேவையை அதிகாரிகள் பாராட்டுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்புற அமையும். நல்ல லாபம் கிட்டும். வங்கி உதவிகளும் உண்டு. தொழிலாளர்களுக்கு தொழில் விருத்திபெறும். புதிய வேலைகள் கைச்சாத்தாகும். மாணவர்களுக்கு பரீட்சைகளில் சித்தி உண்டு.

### இடபம்

**(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)**

இடபராசியினருக்கு இல்லற வாழ்வு நன்றாக அமையும். இடையிடையே சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும், அவை உடனுக்குடன் சீர் செய்யப்படும். புத்திரர்களால் உதவி உண்டு. பிரயாணங்கள் திருப்திகரமாக அமையும். பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். தேகசுகம் பாதிப்படையாது. மங்கல கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு உண்டு. சக உதவிகள் கிட்டும். பழைய நிலுவைகள் வந்து சேரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு சிறப்பாக இருக்கும். வருவாய் பெருகும். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பும், முன்னேற்றமும் உண்டு.

### மிதுனம்

**(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்புசம் 1,2,3 ஆம் பாதங்கள் )**

மிதுன ராசியினருக்கு குடும்பத்தில் இன சனங்களால் அமைதி குன்றும். பணவருவாய் திருப்திகரமாக அமையாது. புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படலாம். தேகசுகமும் இடைக்கிடையே பாதிக்கப்படலாம். தொடங்கும் கருமங்கள் இழுபறி நிலையில் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு நற்பலன்கள் கிடைப்பதற்கில்லை. பிரயாசை கூடுதலாகவே இருக்கும். அதிகாரிகளும் தொல்லை தருவார்கள். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். கையிருப்புகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். தொழிலாளர்களுக்கு கடின முயற்சி தேவை. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறைவாகவே இருக்கும்.

### கடகம்

**(புனர் பசம் 4 ஆம் பாதம், பசம், ஆயிலியம்)**

கடக ராசிக்காரருக்கு குடும்பத்தில் இடையிடையே கருத்து வேற்றுமைகள் காட்டும். எனினும் பெரிதாகப் பாதிக்காது. பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். தொடங்குங் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவுபெறும். வழிபாடுகளால் பல கருமங்கள் சாத்தியமாகும். மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் தாமதமாகும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு உண்டு. எதிலும் நேர்மையாக நடந்துகொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்று. இரும்பு வியாபாரம் செய்வோர் கூடிய லாபம் பெறுவார்கள். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப கல்வி அனுகூலமடையும்.

### சிங்கம்

**(மகம், பரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

சிங்க ராசிக்காரருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இனத்தவர்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். நினைத்த கருமங்கள் நிறைவேறும். பணவருவாய் திருப்திகரமாக அமையும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. குடும்பப் பெண்கள் திருப்தியாக நடந்து கொள்வர். மங்கள கருமங்கள் விரைவில் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு பழைய நிலுவைகள் வந்து சேரும். சிலருக்கு பதவி உயர்வுகள் கிட்டும். அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர். வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகள் சிறப்பாக அமையும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வங்கி உதவிகளும் உரிய நேரத்தில் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். புதிய ஒப்பந்தங்களும் கைகூடும். மாணவர்கள் திருப்தியான பரீட்சை முடிவுகளை எதிர்பார்க்கலாம்.

### கன்னி

**(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)**

கன்னி ராசியினருக்கு குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். கணவன் மனைவியிடையே அந்நியோன்யம் வலுப்படும். இனபந்துக்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு. பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். தேகசுகம் நன்றாக அமையும். மங்கள கருமங்கள் கைகூடி, புதுவாழ்வு அமையும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு அதிகமாகும். மதிப்பு, மரியாதை உயரும். எதிர்பார்த்த தொழில் அனுகூலங்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விற்பனை அமோகமாக நடக்கும். புதிய முதலீடுகளைச் செய்ய நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வி முன் னேற்றமளிக்கும். சிலருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கலாம்.

### துலாம்

**(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)**

துலாம் ராசிக்காரர்களுக்கு அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் தோன்றக் கூடும். எனினும் அவை உடனுக்குடன் தீர்ந்துவிடும். பணவருவாய் தேவைக்கேற்ப இருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். தேகாரோக்கியம் அதிகம் பாதிப்படையாது. மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்குக் காரியாலயத்தில் பணிகள் சிரமமில்லாமல் நடைபெறும். உயர்வுகள், தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் பொதுவாக நன்று. பழைய முதலீடுகள் ஓரளவு விற்பனையாகும். மேலும் கூடிய முயற்சி தேவை. தொழிலாளர்களுக்கு தொழில் முன்னேற்றம் பொதுவாக நன்று. முயற்சிகளுக்கேற்ப பலன் கிட்டும். மாணவர்களுக்கு ஊக்கமும், கடின முயற்சியும் தேவை.

### விருச்சிகம்

**(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

விருச்சிக ராசிக்காரருக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் காட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் நடந்துகொள்வர். புத்திரர்களால் சந்தோஷம் உண்டு. இனபந்துக்களிடையே உறவு அதிகரிக்கும். திருமணப் பேச்சுகள் மனம்போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு மனம்போல் பணியாற்றமுடியும். வசதியான இடமாற்றங்களும், பதவி உயர்வும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வர்த்தக உடன்படிக்கைகள் நற்பலனளிக்கும். வங்கி உதவிகள் அவ்வப்போது கிடைக்கும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமையும், தொழில் ஆர்வமும் உண்டு. புதிய தொழில்களும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் நிறைந்த பலனடைவார்கள். உயர் கல்வி கிடைக்கும்.

### தனுசு

**(மூலம், புராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

தனுசு இராசியினருக்கு குடும்ப உறவுகள் சீராக இருக்கும். பழைய கடன் தொல்லைகள் நீங்கும். கருமங்கள் நினைத்தவாறு நிறைவேறும். புத்திர சுகமுண்டு. தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். பணவருவாயும் நன்று. திருமணப் பேச்சுக்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவி தாராளமாகக் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு அமோகமாக வியாபாரம் நடக்கும். புதிய முதலீடுகள் செய்யலாம். வங்கி உதவிகளும் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் விருத்தி உண்டு. அரச ஒப்பந்தங்களில் நிறைய லாபம் உண்டு. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமுண்டு.

### மகரம்

**(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)**

மகர ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் நன்றாக இருந்தாலும், இடையிடையே பிணக்குகளும் தோன்றும். பணவரவும் செலவும் சமமாக இருக்கும். எடுத்த கருமங்கள் தாமதத்தின் பின் நிறைவேறும். தேகாரோக்கியம் சுமாராக இருக்கும். திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் சமாளிக்க முடியும். உயர்ச்சிகள் தாமதமாகும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சுமாராக இருக்கும். கூட்டு வியாபாரங்கள் தொல்லை தரும். பணவீக்கம் இருந்துகொண்டிருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

### கும்பம்

**(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)**

கும்ப ராசியினருக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். இனபந்துக்களின் வரவால் வீடு கலகலப்பாக இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு வீட்டில் சுபகருமங்கள் நிகழும். பணவருவாய் சிறப்பாக அமையும். மங்கள கருமங்கள் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு நல்ல வரவேற்புக் கிட்டும். வசதியான இடமாற்றங்களும், உயர்ச்சியும் கிடைக்கும். வியாபாரிகள் பழைய முதலீடுகளை விற்று பணம் சம்பாதிப்பர். விற்பனை அமோகமாக இருக்கும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. தொழிலாளர் மத்தியில் ஒற்றுமையும், புதிய தொழில் வாய்ப்பும் கிட்டும். மாணவர்கள் கல்வியில் முன்னிலை வகிப்பர்.

### மீனம்

**(பரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

மீன ராசிக்காரருக்குக் குடும்பத்தில் பல கஷ்டபலன்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும். பிரயாசைக்கேற்ப வருமானம் கிடையாது. செலவுகளும் கட்டுக்கடங்காமல் போகும். உறவினர்கள் அயலவர்களுடன் தொல்லைகள் அதிகரிக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். திருமணப் பேச்சுகள் நிறைவேறாது. உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் தொல்லைகள் அதிகரிக்கும். சக உதவிகள் கிடையாது. மனநிம்மதி இருக்காது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். புதிய முதலீடுகளுக்குப் பணமிராது. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை குலையும். புதிய வேலைகள் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டமிராது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின்
# பொருளாதார கட்டுமானப் பணிகளுக்கு
# ஜப்பான் 9450 மில்லியன் ரூபா கடனுதவி

கொழும்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில், பொருளாதார கட்டுமானங்களை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு ஜப்பான் அரசாங்கம் 9450 மில்லியன் ரூபாவினை, நீண்டகால கடனடிப்படையில் வழங்கியுள்ளதாக, நிதிமற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட இந்தக் கடன்தொகை பத்து வருடத்திலிருந்து 40 வருட காலப்பகுதிக்குள் வழங்கி முடிக்கப்படவேண்டும். வட்டிவீதம் வருடத்திற்கு 0.75 வீதமாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கடற்றொழில், சுற்றுலாக் கைத்தொழில் உட்பட வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி போன்றவற்றுக்கே இந்த நிதி வழங்கப்படுகிறது.

அடிப்படை வசதிகள் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய மற்றும் மாகாண வீதிகள், நீர்முகாமைத்துவம், மின்சாரம், நீர்ப்பாசன முறைமை, தபால் சேவை போன்றவற்றை மீண்டும் நிறைவு செய்வது இதில் ஒரு பகுதியாகும்.

கடன் உதவி வழங்கும் ஆவணப் பரிமாற்றங்களில் கடந்த 8ஆம் திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நிகழ்ந்துள்ளது. ஜப்பான் அரசாங்கம் சார்பில் கொழும்பிலுள்ள ஜப்பான் தூதுவர் அக்கியோ சூடா இலங்கை அரசின் சார்பில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர இருவரும் ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளனர். (தே)

## காணாமற்போனோர் வழக்குகள் விசாரணைக்கு

யாழ்ப்பாணம்

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போனதாகக் கூறப்படும் மூன்று வழக்குகள் நேற்று யாழ் மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

செ.நந்தகுமார் செ.செல்வரட்ணம் ஆ.யோகேஸ்வரன் ஆகிய மூவரும் காணாமற்போனமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்குகளில் உள்ள சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட்டதுடன் இராணுவத்தினரால் கைதுசெய்து காணாமற்போனதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழை உறுதிப்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். மேற்படி வழக்கில் கிருசாந்தி குமாரசாமி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷவும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்த வழக்கு மீள்விசாரணை அடுத்த மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இராணுவச் சீருடைகளுடன் கைதான தமிழ் இளைஞர்கள் விளக்கமறியலில்

இலண்டனிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 40 இராணுவச் சீருடைகளை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்றவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இருவரை இம்மாதம் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகந்த பிரதான நீதிபதி பியந்த சில்வா உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தளையசிங்கம் சுதாகரன் மற்றும் சூசை குவின்ரன் அல்பிரட் ஆகியோராவார்.

கொழும்பு மருதானை டீன்ஸ் வீதியிலிருந்து காலி வீதிக்குச் சென்றுகொண்டிருந்த வெள்ளைநிற வானில் இந்த இராணுவ சீருடைகள் கொண்டு செல்லப்பட்டவேளை, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

40 கூடாரங்கள், 200 கிலோ காந்தத் துண்டுகள் மற்றும் மின் உபகரணங்கள் என்பனவும் வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக இராணுவத் தலைமையகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாகக் கூறும் பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரும், தடை விதிக்கப்பட்ட செயற்பாட்டை மேற்கொள்ள இலண்டனிலிருந்து வந்தார்களா? அல்லது இந்தப் பொருட்களை ஏதாவது அமைப்பிற்குக் கொண்டு சென்றார்களா என்பது குறித்து விசாரணை இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளனர். (தே)

## நிவாரண மோசடி, ஊழலில் ஈடுபட்ட 65 அரச அதிகாரிகள் மீது விசாரணை

கொழும்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 65 அரச அதிகாரிகள் மீது சமூக சேவைகள் அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 15 அரச அதிகாரிகள் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் பிரதி அமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடியில் ஈடுபட்ட 25 அதிகாரிகள் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் மேலும் 25 அதிகாரிகள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், ஊழல் மோசடியில் கிராம சேவை அதிகாரிகளும் ஈடுபட்டிருப்பதாகவும் இவர்கள் குறித்து பொதுநிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்படும் என்றும் சமூக சேவைகள் பிரதி அமைச்சர் சந்திரசேன தெரிவித்தார்.

## வாக்காளர் இடாப்பு திருத்தும்பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்

2005 ஆம் ஆண்டுக்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான வாக்காளர் பதிவேடுகள் திருத்தும் பணி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எனவே, வாக்காளர்கள் வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படாதவர்கள் மற்றும் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும் தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

## மரத்திலிருந்து வீழ்ந்து படுகாயம்

சாவகச்சேரி

உயரமான மரத்தில் மாங்காய் பிடுங்கிய நபர் ஒருவர் மரத்தில் இருந்து விழுந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மீசாலை வடக்குப் பகுதியில் இடம்பெற்றது. கந்தரோடையைச் சேர்ந்த ஜோர்ஜ் (வயது 28) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (29)

## பாடசாலை மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் பாடத்திட்டம்

கல்வியமைச்சு, பாடசாலை மாணவர்களை இலக்காக வைத்து தகவல், தொடர்பாடல் பாடத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ள இந்த பாடத்திட்டம் பாடசாலைகளில் முதலாம், இரண்டாம் நிலை கல்வி மட்டங்களில் அமுல் செய்யப்படும்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம், 12 ஆம் தர மாணவர்களுக்கு தேசிய பரீட்சை நடத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் அடுத்த வருடம் தொடக்கம், க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் புதிய பாடமாக தகவல் தொழில்நுட்பத்தை கற்கும் வாய்ப்பினை பெறுவர். அத்துடன், அனைத்து நவோதயா மற்றும் தேசிய பாடசாலைகளில் தரம் 6 முதல் 9 வரையான வகுப்புகளில் செயற்பாட்டுக் கூடங்களும், விஞ்ஞான கூடங்களும் அமைக்கப்படும்.

முதலாம் நிலை கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு, இறுவட்டுக்கள், கணினி வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

## எல்லாளர் முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்

நவற்கிரி எல்லாளர் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு - வாணி முன்பள்ளி மைதானத்தில் க.சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் இ.ஜெயராஜ் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி நவநீதம், புத்தூர் உப அலுவலக பொறுப்பதிகாரி ஜெயகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் சித்திர பாட ஆசிரியர்களுக்கு சித்திரபாடம் தொடர்பான பயிற்சி வகுப்பு நாளை காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட சித்திரப்பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களையும் இப்பயிற்சிநெறியில் கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். இந்தப் பயிற்சிநெறி 6 நாட்கள் இடம்பெறும். (29)

## வலி-கிழக்கு பிரதேசசபையின் ஊழியர்கள் வேலைநிறுத்தம்



யாழ்ப்பாணம்

ஊழியர்களின் நலன்களில் அக்கறை செலுத்தாத வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளரை உடன் இடமாற்றுமாறு வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தினர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலி-கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 9.00 மணிமுதல் மதியம்வரை இப்போராட்டம் இடம்பெற்றது.

வலி-கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பல ஊழல்களில் தொடர்புபட்டிருப்பதாகவும் - ஊழியர்களின் நலன்களில் அக்கறை செலுத்துவதில்லை என்றும், பிரதேச சபைக்குரிய நிதியை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் ஊழியர்களுடன் தகாத வார்த்தைகளைப் பேசுவதாகவும் - இடமாற்றம் வழங்கப்பட்டபோதும் இவர் இடமாறிச் செல்ல மறுத்து வருவதாகவும் தெரிவித்து ஊழியர்கள் இவரை உடன் இடமாற்றுமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது போராட்டத்திற்கு தீர்வு கிடைக்காவிடின் தொடர்ந்து போராட்டம் இடம்பெறும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மேற்படி போராட்டம் தொடர்பாக பிரதேச சபை செயலர் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தப் போராட்டம் தொடர்பாக ஊழியர்கள் தமக்கு தகவல் எதுவும் தரவில்லை என்றும், தான் இங்கு இடமாற்றம் பெற்று ஒரு வருடம்கூட முடியவில்லை என்றும் தெரிவித்ததுடன் ஊழியர்கள் தன்னுடன் பிரச்சினைகள் குறித்து பேசி இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

மேற்படி ஊழியர்களின் போராட்டத்திற்கு பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் சிலரும் ஆதரவு வழங்கி அவர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தின் காரணமாக பிரதேச சபையின் பணிகள் முழுவதும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

## கொழும்பிலுள்ள
# உயர்பாதுகாப்பு வலயத்தினுள் பிக்குகள் செல்லக் கட்டுப்பாடு

கொழும்பு

கொழும்பிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசிக்கும் பௌத்த பிக்குகளுக்கு நேற்றுமுன்தினம் முதல் பொலிஸார் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

இந்தப் பகுதிக்குள் பௌத்த பிக்கு ஒருவர் செல்லும்போது அவர் பொலிஸாரின் உதவியை நாடவேண்டுமென்பதுடன் தனியாகச் செல்ல அனுமதிப்பதில்லையெனவும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

பௌத்த பிக்குமார் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் ஊடுருவி தற்கொலை முயற்சிகளில் ஈடுபடத் திட்டமிட்டிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல்களையடுத்தே தாம் இந்தத் தீர்மானத்திற்கு வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வரும் பௌத்த பிக்கு, அங்குள்ள பொலிஸாரின் வழிகாட்டல்களுடன் தனது கடமைகளை நிறைவுசெய்து கொண்டு வெளியேற அனுமதிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் துணையில்லாமல் பௌத்த பிக்குகள் கொழும்பிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நடமாடமுடியாதென்ற கட்டுப்பாட்டை பொலிஸார் கடுமையாக நடைமுறைப்படுத்தியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொறுப்பை தட்டிக்கழிக்க ஜனாதிபதி முயல்கிறார்!

## ஐ.தே.க சாடல்

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு யோசனையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி - பொறுப்புக்களிலிருந்து தப்பிக்க ஜனாதிபதி செய்யும் முயற்சியென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி எடுக்கும் முயற்சியானது தட்டிக்கழிக்கும் செயலாகும் என்பதுடன், இது விடயத்தில் ஜனாதிபதி தனது பொறுப்பிலிருந்து விலகும் செயலாகவே நாம் கருதுகிறோம்.

அரசியல் சாசனத்துக்கு அமைய நிறைவேற்று அதிகாரத்துக்கு சில பொறுப்புக்களும், தனியான சட்ட திட்டங்களும் உள்ளன. நாடாளுமன்ற நடவடிக்கைகயை நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் மேற்கொள்ளமுடியாது. எனவே பொதுக்கட்டமைப்பு தொடர்பாக தீர்க்கமான முடிவினை ஜனாதிபதி எடுக்கவேண்டும்.

இனநெருக்கடி நிலைமை தொடர்பாக எத்தகைய அதிகாரங்களை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் முன்னாள் பிரதமரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இருவரும் மேற்கொண்டனர்.

ஒஸ்லோ, ரோக்கியோ உடன்படிக்கைகளுக்கமைய பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமாயின், ஐ.தே.கட்சி ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க - எதிர்க்கட்சி ஆசனத்தில் இருக்கும்போதும் ஜே.வி.பியினர் பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமெனத் தெரிவித்தார்.

# யுத்தத்தால் வீடுகளை இழந்த 1000 பேருக்கு கொடுப்பனவுகள்!

யாழ்ப்பாணம்—

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் யாழ் மாவட்டத்தில் யுத்தத்தால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கான வீடமைமைப்புக் கொடுப்பனவு நேற்று யாழ். செயலகத்தில் வைத்து ஆயிரம் பேருக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை 11.00 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், ஈழவேந்தன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயலாளர் மதனராஜா, வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து, பிரதேசசபை செயலர் பிரிவு ரீதியாக வீடமைப்புக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

# பொதுக்கட்டமைப்பில்...

தெரியவில்லை. அமிலதேரரின் உயிருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அப்போது அவர்கள் அதை உணர்வார்கள்.

தம்பர அமிலதேரர் உயிரிழக்க நேரிட்டால் அந்தப் பாவச் செயலைச் செய்த அரசுக்கெதிராக மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்.

பொதுக்கட் டமைப்பில் ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்திட்டால் அதுவே அவருக்கு கடைசி நிமிடமாக இருக்கும். தேரர் உயிரிழக்க நேரிட்டால் நாட்டில் ஏற்படப்போகும் அழிவுகளை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதுள்ளது. எங்கள் பொறுமைக்கு ஒரு எல்லையுண்டு.

அனைத்து நிகாயங்களின் மகாநாயக்கர்களும் தம்பர அமிலதேரரின் இறுதிச்சடங்குகள் முடியும்வரை மௌனமாக இருக்கப்போகிறார்களா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அங்கு பிக்குகள் முன்னணியின் மற்றொரு தலைவரான ரத்னபால தேரர் கூறுகையில் -

ஜனாதிபதி சந்திரிகா - தம்பர அமில தேரர் விடயத்தில் அமைதியாக இருப்பது - பௌத்த பிக்குகளால் அவரது தந்தை படுகொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே இருக்கிறது.

அவரது தந்தையின் மரணத்துக்காக பௌத்த பிக்குகளின் உயிரை பழிவாங்க ஜனாதிபதி சந்திரிகா எண்ணினால் அவர் அனைத்தையும் இழந்துவிடுவார் என்றும் அவர் மேலும் எச்சரித்தார்.

# நாடாளுமன்ற அனுமதி...

தெரிவிக்கப்பட்டதாகவும், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வது எமக்கு பொருட்டல்ல. ஆனால் பொதுக்கட்டமைப்பில் அவசியம் கையெழுத்திடவேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் நீண்டநேரம் நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்திலும் பொதுக்கட்டமைப்பை தாக்கல் செய்வது குறித்தே விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் சட்டத்தரணிகளிடம் இந்த வரைபை இறுதிப்படுத்த ஆலோசனை பெறவும் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளதாக முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த முடிவை பேரினவாத பௌத்த பிக்குகளின் கட்சியான ஜாதிக ஹெல உறுமய வரவேற்றுள்ளது. ஆனாலும் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்துவற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அரசு பெறவேண்டுமென்றும் அந்தக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து ஜாதிக ஹெல உறுமய கட்சியை சேர்ந்த சம்பிக்க ரணவக்க கூறுகையில் -

பல திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் பொதுக்கட்டமைப்பு வரைவு தாக்கல் செய்யப்படுவது போராட்டம் நடத்தியவர்களுக்கு கிடைத்த வெற்றி. ஹெல உறுமயவின் கோரிக்கைகளை ஆளும் அரசு நிராகரித்தால் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரநேரிடுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு வரைபு நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு விடப்பட்டால் - பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பொதுக்கட்டமைப்பை...

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை கைச்சாத்திட்டு அதனை அமுல்படுத்தக்கூடிய அதிகாரம் ஜனாதிபதியின் கையிலுள்ளது.

எனவே இதனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரத் தேவையில்லை.

அவ்வாறு கொண்டு வருவதென்றாலும் கைச்சாத்திட்ட பின்னரே கொண்டுவரவேண்டும்.

இதனை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருவதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை. ஏனென்றால் அது இன்னமும் தாமத மேற்படுத்தக்கூடிய சூழலை ஏற்படுத்துமே தவிர விரைவாக இதனை உருவாக்க வழிவகுக்காது.

பொதுக்கட்டமைப்பை பொறுத்தமட்டில் அது எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பது அனேகமாக எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

எனவே இந்தப் பொதுக்கட்டமைப் பில் இரு பகுதியினரே ஈடுபட்டு கைச்சாத்திடுகின்றனர். தமிழ்மக்கள் சார்பில் விடுதலைப் புலிகள், மற்றையது அரசு ஆகும்.

எனவே இந்த பொதுக்கட்டமைப்பின் நோக்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் அடுத்து புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் முயற்சியே தவிர வேறொன்றுமில்லை.

பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக நாடாளுமன்றில் எடுக்கப்படுகின்ற, அதனை அமுல்படுத்துவதற்கு தேவையான ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்குமே தவிர அரசிற்கு ஆதரவு கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகளின்...

காயமடைந்த போராளிகளான நவநீதன் மற்றும் ராஜன் ஆகியோர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரச படையுடன் இணைந்து செயற்படும் இராணுவப் புலனாய்வுத் துறையினரே இந்தச் சம்பவத்திற்குப் பொறுப்பு என்றும், அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் இது ஒரு போர் நிறுத்த மீறல் என விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை முறைப்பாடு செய்துள்ளது.

# பேரினவாதப்...

புப் போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு அண்மையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்று...

எமது கட்சி நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகிவிட்டது. அரசிலிருந்து நாம் வெளியேறிவிட்டால் ஏற்படும் விளைவுகளுக்கு எமது கட்சியே பொறுப்பென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார். இதனை நாங்கள் முற்றாக மறுக்கிறோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகள்அல்ல.

இனிமேல் நாம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்து சுயாதீனமாக இயங்கவல்ல கட்சியாகச் செயற்படுவோம். நாடாளுமன்றத்தில் மட்டுமல்லாது தென்னலங்கையிலுள்ள மாகாணசபைகளிலும் எமது உறுப்பினர்கள் எதிர்க்கட்சியிலேயே அமர்வார்கள்.

புதிய கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக ஜே.வி.பி. கவனம் செலுத்தியுள்ளது. எமது கொள்கைகளுக்கு ஏற்றவகையில் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் கூட்டமைப்பை ஏற்படுத்தத் தயாராகவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் நான்கு அமைச்சுக்களையும் பிரதி அமைச்சுக்கள் எட்டையும் ஜே.வி.பி. கொண்டிருந்ததுடன் 39 நாடாளுமன்ற ஆசனங்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் கூட்டணி அமைத்துக்கொண்டமையும் இந்தக் கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிக்கொண்டமையும் தெரிந்ததே.

# 'சுனாமி' பொதுக்...

மேலும் கூறியதாவது -

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டு தசாப்தகால யுத்தம் 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நிறுத்தப்பட்டுள்ளது.

வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் நடைமுறையிலுள்ள போதும், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்படும் பரஸ்பர நம்பிக்கையில்லா தன்மையாலும் இனப்பிரச்சினை தீர்வுக்கான அமைதி முயற்சிகள் தடைப்பட்டுள்ளன.

இந்த நிலையை நீக்கும் வகையில் நோர்வே அரசு மேற்கொண்டு வரும் அனுசரணை முயற்சிக்கு அமெரிக்கா பூரண ஆதரவளிக்கிறது.

கடந்த சில மாதங்களாக சுனாமி தொடர்பான நிவாரணப்பணிகள் அமைதி முயற்சிகளை இரண்டாம் தர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக பின்தள்ளியிருந்தன.

இந்த அனர்த்த நிவாரண நிதியை பங்கிடுவதற்கான பொது உடன்பாட்டை எட்டுவதற்கு நோர்வேயின் அனுசரணையுடன் இரண்டு தரப்பினரும் முயன்று வருகின்றனர்.

இந்தப் பொது இணக்கப்பாடு அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான பிரதான உதவுபொருள் மட்டுமல்லாமல், இரு தரப்பினருக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு பிரதான தளமுமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தப் பொதுக்கட்டமைப்பை அமைக்க தயாராக உள்ளபோதும், அவரது அரசில் அங்கம் வகிக்கும் கட்சியினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். எது எப்படியிருப்பினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முயற்சிக்கு அமெரிக்கா பூரண ஆதரவளிக்கிறது.

இந்த விடயத்தில் எட்டப்படும் அமைதி வழியிலான நல்லிணக்கம் எமது நிவாரணப்பணி தொடர்பிலான சீரான வேலைத்திட்டத்திற்கு பெரும் உதவியாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின்...

உடன்படிக்கையின் மூலம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்மூலம் கொழும்பிலும், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இருக்கும் சிங்கள, தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் குண்டுகள் வெடிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

தற்கொலைக் குண்டுதாரிகள் தமது உயிரைப் பலியிட்டு மற்றையவர்களைக் கொல்வது நிறுத்தப்பட்டுள்ளது.

இன்று விடுதலைப் புலிகள் தமது இராணுவரீதியான நடவடிக்கைகளில் தொண்ணூறு வீதமானவற்றை நிறுத்திவிட்டனர்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளை பாதி வழியில் நிறுத்திவிடமுடியாது.

எனவே, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டியது அவசியமானது, பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையொன்று அவர்களுடன செய்துகொள்ளப்படுவது அதற்கு ஊக்கமளிக்கும்.

தமிழ் மக்களுக்கு முன்னர் இந்த நாட்டில் ஆயுதங்களை ஏந்திய ஜே.வி.பி.யினர், வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வருவதாக எப்போதாவது அறிவித்தார்களா?

அப்படியானவர்கள் இன்று விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதாகக் கோருவது எந்தவகையில் நியாயமானது?

தமது மக்களுக்கு அரசாங்கம் எந்தவிதமான உதவிகளையும் வழங்குவதில்லை என்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டு நியாயமானது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்று கோரும் ஜே.வி.பியினர், கிழக்கில் வாழும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பட்டினியால் சாகவேண்டுமென்று விரும்புகின்றனரா என ஜனாதிபதி சந்திரிகா கேள்வியெழுப்பினார்.

ஜனாதிபதியின் இந்த உரை அரசாங்கத் தொலைக்காட்சியூடாகவும் ஒளிபரப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# மரண அறிவித்தல்

## திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி (பரமேஸ்வரி)

மருதடி வீதி, நல்லூரரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி 2005.06.16 (நேற்று) மாலை காலமானார். இவர் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மாள் ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மாவின் மருமகளும், ராஜ்குமார், ரஜனி (பிரான்ஸ்), ரஜனிகாந்த், ராஜேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகதாஷின் (பிரான்ஸ்) மாமியாரும், சயிரூபனின் பேர்த்தியாரும், சண்முகநாதன் (வவுனியா), பாலசிங்கம் (ஜேர்மனி), சிவலிங்கம் (சோமு - ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பவதி, நாகலச்சுமி, மீனாம்பிகை, சிவராசா (ஒய்வு பெற்ற உப அதிபர்), இரகுபதி (கோட்டக்கல்வி அலுவலகம், யாழ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
பா.இராஜ்குமார்
மகன்

77, மருதடி லேன்,
நல்லூர்.

(1952)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.